# ஆத்மஜோதி

கார்த்திகை – 1979



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

**ஓர் ஆத்மீக மாதவெளியீடு**

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே
-சுத்தானந்தர்

**ஆசிரியர்: நா. முத்தையா**

**ஜோதி: 32 –சித்தார்த்தி ஸ்ரீ கார்த்திகைமீ 1உ – (17-11-79) சுடர்: 1**

## பொருளடக்கம்

காலைப் பிரார்த்தனை — 1
நாவலருக்கு அஞ்சலி — 2
நாவலர் நூற்றுண்டில் நாம் சாதித்தது என்ன? — 3
நாவலர் பெருமானின் நல்ல கதைகள் — 8
அருள் — 11
கேள் மனமே கேள்! — 12
அன்னம் பாலிப்புக்கு ஒரு மன்னவன்–சுவாமி சர்வாதித்தானந்தா 17
ஸ்ரீமத் சுவாமி சர்வாதித்தானந்தாஜீ மஹராஜ் நினைவு — 21
ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் நன்னெறிக் கதை — 24
கலியுக தர்மம் — 25
ஐயம் தெளிதல் — 29
சுவாமி ராமதாஸ் அருளுரைகள்—38 — 31
மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா? — 34
சைவத் தமிழுலகை உய்வித்தவை நாவலரது.... — 38
இந்துமத வினாவிடை — 39
ஆத்ம சிந்தனை — 41
அருணகிரியாரும் வாதவூரடிகளும் — 46

## சந்தா நேயர்களுக்கு

**அன்புடையீர்,**

**அன்பு வணக்கம்**

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 32ஆவது ஆண்டு முதலாவது சுடராகும். கடந்த 31 ஆண்டுகளாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக்கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 15 ரூபாவை அனுப்பிவைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்துவைத்தால் ஜோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டுபுரிந்தவர்களாவீர்கள்.

ஆத்மஜோதி நிலயம், **நா. முத்தையா**
நாவலப்பிட்டி. (இலங்கை)

# காலைப் பிரார்த்தனை

பெருங்கருணைக் கடவுளே! சென்ற இராத்திரியிலே தேவரீர் அடியேனைக் காத்து அருளினதின் நிமித்தம், தேவரீரை அடியேன் துதிக்கிறேன். இந்தப் பகலிலும் அடியேனைக் காத்து அருளும். அடியேன் பாவங்களைச் செய்யாவண்ணம், அடியேனைத் தடுத்து ஆட்கொண்டு அருளும். அடியேன் முன்படித்த பாடங்களும், இனிப்படிக்கும் பாடங்களும், அடியேன் மனதிலே எந்தநாளும் தங்கும்படி அருள் செய்யும்.

# மாலைப் பிரார்த்தனை

மகாதேவரே! அடியேன் செய்த பாவங்களை எல்லாம் பொறுத்து அருளும்; இந்த இராத்திரியிலே அடியேனைக் காத்து அருளும். அடியேன் தேவரீரை அறிந்து, தேவரீருக்குப் பயந்து, தேவரீர்மேல் அன்பு வைத்துத் தேவரீரைத் துதித்து வணங்கும்படி செய்தருளும். அடியேன் இறக்கும்பொழுது தேவரீரை மறவாத தியானத்துடனே, தேவரீருடைய பாதத்திலே சேரும்படி அருள்செய்யும்.

–யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர்

# காலை மாலைப் பிரார்த்தனை

அருட்பெருஞ் சோதி! தனிப்பரம் பொருளே!
அடியருக்கருளும் ஆனந்த தேவே!
உன் அடிமலர் இணைகட்கு அடைக்கலம் அடைக்கலம்.

உனதண்டப்படைப்பில் அடிமையின் நிலைமை அணுவிலும் அணுவென அறைதலும் அதிகமே; ஆயினும் எமை நீ அன்னையைப் போல அன்புடன் பேணி அருள்புரிகின்றனை; இன்னமும் எங்கள் தம் இருவினை நீக்கி இன்னருள் புரிந்து நன்னயம்பெருகும் நலம்பல தருவாய். முத்தியளித்திடும் முதல்வா! எம் தம் சித்தம் திருத்திச் சீர்பெறச் செய்வாய்! தீய செயல்கள் சிறிதளவும் யாம் செய்யாதிருக்கத் திருவருள் புரிவாய்! பிறப்பெனும் பெருநோய் பிடித்திடாதெமக்குச் சிறப்புடன் முத்தி சீருடன் அருளே.

–இந்தியா–கே. ஆறுமுகநாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலருக்கு அஞ்சலி

கார்த்திகைமா தத்துமகங் காசினிக்குச் சைவநிலை
சேர்திப் பரமயஞ் சேதித்துச் — சீர்த்திமிக
மேவுதமிழ் தந்தகந்த வேணல்லூ ராறுமுக
நாவலர்வீ டுற்றதிரு நாள்.

— திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை

தேவரசு மெய்ந்நூற் றிறம்பலவு மாருயிருக்
காவலினுற் போதித்த வாறுமுக — நாவலனார்
சீர்முகத்தைக் கண்டவர்க டெண்டிரைப் பூ மண்டலத்தில்
யார்முகத்தைக் காண்ப தினி.

— திரு. அ. சிவசம்புப் புலவர்

ஆறுமுக நாவலனை ஆநமுண ராப்பொருளைத்
தேறுமுகங் கொண்டு தெளிந்தானை — ஆறுமுகம்
என்றிருக்க ஓர்முகமும் எங்களுக்குத் தோற்றுமற்
சென்றொளித்தா னந்தோ சிவா.

— திரு. பூ. முருகேசபிள்ளை

நையலிரோ வையகத்தீர் நாவலன்றான் போயினனென்
றையனவன் முத்தி யடைந்தனனால் — மெய்யே
நலமடைந்தா னென்றே நனிமகிழ்க யாரும்
பல புலம்பி யென்னோ பயன்.

— திரு. சிவசங்கர பண்டிதர்

தேறுமுது சர்வகலை தேர்ந்த ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுக சாமியே யப்பனே — கூறுமுதற்
சற்குருவே சீனியே சர்க்கரையே கற்கண்டே
இக்குவல யம்விடுத்த தேன்.

— திரு. க. நமச்சிவாயபிள்ளை

வன்றொண்டன் நாவலர்கோன் வாழ்வா வதுமாயம்
என்றுரைத்த தேவாரத் தின் பொருளை—நன்றியுடன்
சிந்தை செய்தேன் நாவலனே சேர்ந்தாய் நீ என்பதனாற்
புந்திநொந்து துக்கமிக்க போது

— திரு. சி. செந்திநாதையர்



# நாவலர் நூற்றுண்டில் நாம் சாதித்தது என்ன?

ஆசிரியர்

நாவலர் என்றதும் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரா. நெடுஞ்செழியன் அவர்களை நோக்கி ஓடுகின்றது இன்றைய இளைஞரின் உள்ளம். அந்த அளவுக்கு நாவலர் பெருமானை நாமும் உணர்ந்து கொள்ளவில்லை; எமது இளையசந்ததியினருக்கு அறிமுகமும் செய்துவைக்க வில்லை. கலைக்களஞ்சியத்தைப் பார்த்து ஆறுமுக நாவலரை அறிந்துகொள்ளும் அளவுக்கு நமது இளைஞருடைய தமிழ்ப்பக்தியும் சமய உணர்வும் முன்னேறியுள்ளது.

நாவலர் பெருமானை ஐந்தாங்குரவர் என்று அழகாக நூலிலே அச்சிட்டுள்ளார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களிலும் மலையகத்திலுள்ள தமிழர்களிலும் எத்தனைபேர் நாவலர் பெருமானை அறிந்துள்ளார்கள்! எத்தனை சங்கங்கள் நாவலர் பெருமானின் குருபூஜையைக் கொண்டாடுகின்றனர். சுவாமி விபுலானந்தருடைய தினத்தை வடமாகாணத்தில் எத்தனை சங்கங்கள் நினைவுகூர்ந்துள்ளன? இந்த அளவுக்கு எமதுபிரதேச உணர்வுகள் தலைதூக்கி உள்ளன.

நாவலர் பெருமான் பாடசாலைப் பிள்ளைகளுக்கென்று பாலபாடங்கள் எழுதியதன் பின்பு, எத்தனையோ வாசிப்புப் புத்தகங்கள் தோன்றி, இருந்த இடமும் தெரியாதுமறைந்துவிட்டன. நாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்திலுள்ள நீதிவாக்கியங்களும் நீதிக்கதைகளுமே மனித வாழ்க்கைக்கு வழிகாட்டப் போதியனவாகும். இரண்டாம் வகுப்பு மாணவன் நல்ல விடயங்களை மனதில் பதித்துக்கொள்வதற்கும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இரண்டாம் வருட மாணவர்கள் நல்லனவற்றை உணர்ந்து கொள்வதற்கும், இரண்டாம் வகுப்பு ஆசிரியர் நல்லாசிரியனுய் வாழ்ந்து காட்டுவதற்கும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் இரண்டாந்தரத்தினர் தம்மை முதலாந்தரத்தினர்ஆக்கிக் கொள்வதற்கும் நாவலர் பெருமானின் பாலபாடம் இரண்டாம் புத்தகம் ஒன்றே போதியது.

இடைக்காலத்திலே தமிழ்க் குழந்தைகளின் தமிழ் அறிவும் சமய உணர்வும் மேலேஉள்ளவர்களை நோக்கிச் செல்லாமல் தடுக்கப்பட்டு, கீழே இருப்பவர்களை நோக்கிச் செல்லுங்கள் என வாசினைப்புத்தகங்கள் மூலம்வழிநடத்தப் பெற்றுவிட்டார்கள். நாவலர் பெருமான் தம்முடைய வாழ் நாளில் தனித்து ஒருவராக நின்று கொண்டே மொழிக்கும் சமயத்திற்கும் ஒரு திருப்பு மையத்தை உண்டாக்கிஞர்.

இந்த நூற்றுண்டு காலத்திலே; நாவலர் பெருமானுக்குப் பின்பு மேல்நோக்கிய திருப்புமையம் ஏற்பட்டுள்ளதா? என்ருல், இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. ஆனுல் கீழ் நோக்கிய திருப்பு மையங்கள் பல ஏற்பட்டுள்ளன. ...லர்பெருமான் மறைந்து நூற்றுண்டுகளாக செய்யப் ...த ஒன்றை இன்றுள்ள நாவலர் பக்தர்களும், ...ழ வளர்க்கும் சங்கங்களும் சமயத்தை வளர்க்கும் சங்கங்களும் செய்தே ஆகவேண்டும்.

ஈழம் முழுவதிலும் பரந்திருக்கும் தமிழர்களுக்கே நாவலர்பெருமானைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை. தமிழகத்திலும் இன்று மேடைப் பேச்சில் வல்லவர்களாகக் கருதப்படுபவர்களில் ஒரு சிலரே ஈழநாட்டுக்கு வரும் காலங்களில் நாவலர் பெருமானை நினைவுகூருகின்றுர்கள் என்ருல், அதில் எவ்வித பொய்யும் இல்லை என்றே கூறவேண்டும். நாவலர் நூற்றுண்டு விழாச்சபையினருக்கு இதில் பெரும் பொறுப்பு உள்ளது. உலகு எங்கணும் உள்ள தமிழர்கள் நாவலர் பெருமானை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுத்துவதோடு



உலகப் பெரியார் வரிசையில் நாவலர் பெருமானை அறிமுகம் செய்துவைக்கவேண்டிய பெரும் பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் கல்வி மந்திரியாக இருப்பவர்கள் சமய உணர்வோடு சமரச மனுேபாவமும் உடையவர்கள். நாவலர்பெருமானின் பாலபாடங்களைப் படிப்பதால் எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாய மாற்றம் ஏற்படும் என்பதனை விளங்கவைத்து அப்பாலபாடங்களை உப பாடப்புத்தகங்களாகவாவது வைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யவேண்டும்.

அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே நாவலர் பெருமானுடைய படைப்புகளைக் கொண்ட ஒரு கண்காட்சியும் ஈழத்துப் படைப்புகளைக்கொண்ட ஒரு கண்காட்சியும் இடம்பெறச் செய்ய வேண்டும். ஈழத்திலுள்ள புலவர்களால் எழுதப் பட்ட பல நூல்கள் அச்சுவாகனம் ஏருமலே இருக்கின்றன. அக்கையெழுத்துப் பிரதிகளையோ, ஏட்டுப்பிரதிகளையோ கண்காட்சியில் இடம்பெறச் செய்யத் தக்கதாக நாம் முயற்சிக்கவேண்டும்.

நாவலர் பெருமானைப் பற்றிய ஆய்வு நூல் ஒன்று தமிழாராய்ச்சி மகாநாட்டில் வெளியீடு செய்தால் எதிர்காலத் தமிழருக்கும் அது மிகப்பயனுள்ளதாக இருக்கும். நாவலர் பெருமானுடைய பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு மலையகம் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. நாவலர் பெருமான் இன்று பிறக்க நேர்ந்தால் மலையக மக்கள் மத்தியிலே தான் பிறந்து தொண்டு செய்யவிரும்புவார்.

கல்வியறிவிலும் சமய அறிவிலும் பின் தங்கி இருக்கும் மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலே கல்வி விருப்பையும் சமய உணர்வையுந் தூண்ட வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழ் மகனையுஞ் சார்ந்ததாகும். நாவலர் பெருமானை நினைவு கூருமுகமாக மலையகத்திலே தோட்டந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோறும் நாவலர் பெருமானுடைய பெயராலேயே வாசிக சாலைகளை ஏற்படுத்தி நாவலர் பெருமானுடைய நூல்களை இடம் பெறச் செய்தால் பெரிய தொண்டாகும். பல பாடசாலைகளில் உள்ள நூல் நிலையங்களில் நாவலர் பெருமானுடைய நூல்களைக் காணுதல் குதிரைக் கொம்பாக இருக்கிறது. நாவலர் பெருமானுடைய பிரதிமைப் படங்கள் வாசிகசாலை தோறும்பாடசாலைகள்தோறும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

நாவலர் பெருமானுடைய பெயரால் கல்விநிதி ஒன்று ஏற்படுத்தி அதனை நிரந்தர வைப்புப் பணமாக வைத்து அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு மாகாணத்திலிருந்து ஒவ்வொரு குழந்தைக்காவது புலமைப் பரிசில் வழங்கலாம். இந்நூற்றுண்டை முன்னோடியாக வைத்துக்கொண்டு தமிழும் சமயமும் வளர நாம் ஆவன செய்தல் வேண்டும். நாங்கள் சமயத்தின் பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர, மக்களைச் சமய வாழ்க்கை நடத்துமாறு தூண்டத் தவறி விட்டோம். சமயம் உதட்டளவிலேதான் உண்டு, உள்ளத்திலே சமய வாழ்க்கை செல்லவில்லை.

கடவுளைப் பற்றி அறிந்து கொண்டிருக்கிறோமே தவிர, கடவுளை அநுபவிக்கத் தவறி விட்டோம். கடவுள் அறிவுப் பொருள் அல்ல, அவர் அநுபவப் பொருள். மனித வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிந்து வெகுதூரம் சென்று விட்டது. வாழ்க்கையே, சமயம். சமயமே; வாழ்க்கை என்பதை என்றைக்கு மக்கள் உணருகிறார்களோ அன்றைக்குத்தான் மனித சமுதாயத்தில் நாம் மனிதப் பண்பாட்டைக் காண முடியும். ஆண்டில் ஒருமுறை ஒரு நாளைக்கு நாவலரை ஐந்தாங்குரவராக வைத்துக் குருபூஜை செய்து விட்டு அடுத்த ஆண்டுக் குருபூஜை வரும் வரைக்கும் மறந்து விடுகின்றோம்.

நாவலர் பெருமானுடைய படத்திற்குத் தீபாராதனை செய்து அவரைத் தெய்வமாக்கிவிட்டு அவர் சமூகத்திற்குச் செய்த சேவைகளை நினைவுகூரத்தவறி விடுகின்றோம். அவர்செய்த சேவையில் ஆயிரத்தில் ஒன்றையாவது நாம்



செய்யமுடியாதா? நாவலர் தனி ஒரு மனிதரல்ல; அவர் ஒரு ஸ்தாபனம். அவர் தனி ஒருவராக இருந்து செய்த சேவையில் நூற்றில் ஒரு பாகத்தைதானும் இன்றைய ஸ்தாபனங்களால் சாதிக்க முடியவில்லையே!

நாவலர் பெருமானின் பின்வரும் உபதேசங்கள் நமது வாழ்வைச் செம்மைப்படுத்துவதாக!

''நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன்உயிர்க்குப் பயன் படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட்கழிப்பது, ஐயையோ எவ்வளவு அறியாமை! நாவை அடக்கி விக்கல் எழும் போது, ஒன்றைசெய்தலே அன்றிச் சொல்லலுங் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும் மோட்சத்திற்கு ஏதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய். நாம் சிற்றறிவு சிறு தொழில் உடையோம். ஆதலால்,முற்றறிவுமுற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்.''

## ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம்

திருவாசக மடம் - திருக்கேதீச்சரம்.

திருக்கூட்டத்தினர் வருடா வருடம் எடுக்கும் திருவாசக விழா வழமைபோல் நடைபெறத்திருவருள்பாலித்துள்ளது. விழா இம்முறை 24-12-79 ஆரம்பமாகி 2-1-80இல் நிறைவுறும். விசேட மகாநாடு 30-12-79 சிவபூசை மகாநாட்டுடன் ஆரம்பமாகி 1-1-80இல் முடிவடையும். இதில் இலங்கையின் பேரறிஞர்கள் பங்குபற்றுவார்கள். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமானின் நல்ல கதைகள்

எந்த உயிரையும் கொல்லாத ஒரு சந்நியாசி ஒரு ஏரிக்கரைமேலே போனார். போகும்போது ஒரு செம்படவன் அந்த ஏரியிலே மீன் பிடித்தான். சந்நியாசி செம்படவனைப் பார்த்து ''ஐயா நீ எப்போது கரைஏறுவாய்?'' என்றார். ''ஐயா, என் பறி நிரம்பினால் கரை ஏறுவேன்'' என்றான்.

* * *

இரண்டு மல்லக செட்டிகள் ஒருவரோடு ஒருவர் மல்யுத்தம் பண்ணினார்கள். ஒருவன் மற்றவனைக் குப்புறத் தள்ளி, புரட்டிப் புரட்டி உதைத்தான். உதையுண்ட வீரன் எழுந்து நின்று, ஜனங்களைப் பார்த்து, ''ஆனால் என்ன! என் மீசையிலே மண்படவில்லை'' என்று மீசையை முறுக்கினான்.

* * *

ஒரு மனிதன் ஒரு மகாராசனைப் பார்த்து, ''நீர் எனக்கு ஆறுமாசம் நல்ல போசனம் தருவீராகில் பின் ஒரு மலையை எடுப்பேன்'' என்றான். அவன் இவனுக்கு அப்படியே நல்ல ஆகாரம் கொடுத்தான். பின் மலைக்குச் சமீபத்திலே அழைத்துக் கொண்டுபோய் ''இதை எடு'' என்றான். அவன் ''நீங்கள் எல்லோரும் எடுத்து என் தலைமேலே வைத்தால் எடுக்கிறேன்'' என்று சொன்னான்.

* * *

செலவுகாரனாகிய ஒரு உத்தியோகத்தன் ஒரு செல்வனைக் கடன் கேட்டான். ''திரும்ப நீ எப்படிக் கடன் தீர்ப்பாய்'' என்றான். ''என் சம்பளத்திலே மாதந்தோறும் சேர்த்துத் தருவேன்'' என்றான். இதற்கு முன்னே தானே நீ இப்படிச் சேர்த்துக்கொள்ளலாகாதா என்றான். ''தெரியாமலே இருந்துவிட்டேன்'' என்றான்.



''ஆனால் நான் தெரிவிக்கிறேன்; எப்படியெனில் கடன் தரமாட்டேன்; போ'' என்றான். பின் பணஞ் சேர்க்கத் தொடங்கினான்.

* * *

ஒரு குரு தம்முடைய சீடனுக்கு ஞானங்கள் உபதேசித்தார். உபதேசிக்கும்போது, சீடன், தன் வளையிலே நுழையப்போகும் எலியைப் பார்த்து அதன் மேலே நினைப்பாக இருந்தான். குரு உபதேசித்தவுடனே ''சீஷா, எல்லாம் நுழைந்ததா?'' என்றார். சீஷன், ''எல்லாம் நுழைந்தது, வால் மாத்திரம்தான் நுழையவில்லை'' என்றான். மூடர்களுக்குச் சொல்லும் புத்தி இப்படியே இருக்கும்.

* * *

ஒராசிரியர் சீடன் வீட்டுக்குப் போய், சில வார்த்தைகள் பேசிக்கொண்டு இருக்கும் பொழுது, ''சீடா, உன் பிள்ளைகள் நால்வருள் யோக்கியன் யாவன்'' என்றார் ''சுவாமி, இங்கே கூரை வீட்டின்மேல் ஏறிக்கொண்டு கொள்ளிக்கட்டை சுழற்றுகிறானே! இவன்தான் இருக்கிறவர்களுக்குள்ளே பரம யோக்கியன்'' என்றான். குரு ''மற்றை மூவர்கள் எப்படிப்பட்டவர்களோ'' என்று, மூக்கின் மேலே விரல்வைத்து, பெருமூச்சுவிட்டு, ''அப்படியா'' என்று விசனப்பட்டார்.

* * *

ஒரு செல்வன் தன் பிதாவுக்கு ஓட்டிலே கஞ்சிவார்த்துக் கொண்டு வந்தான். அவன் பிள்ளை அதைப்பார்த்து, அந்த ஓட்டை எடுத்து ஒளித்துப் போட்டான். பின் அந்தச் செல்வன் தன் பிதாவைப் பார்த்து '' ஓடு எங்கே'' என்று கேட்டு அடித்தான். அப்பொழுது அந்தப்பிள்ளை ''அப்பா என் பாட்டனை அடியாதே நானே அந்த ஓட்டை எடுத்து ஒளித்து வைத்தேன்; ஏன் என்றால், நான் பெரியவன் ஆன பின் உனக்கு வேறே ஓடு சம்பாதிக்க மாட்டேன்'' என்றான் அதைக்கேட்டு, செல்வன் வெட்கப்பட்டு அன்று முதல் தன் பிதாவை மிகுந்த சௌக்கியமாக வைத்திருந்தான்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாடகன் தெருத்திண்ணையிலே இருந்து தலையசைத்துக் கொண்டு சங்கீதம் பாடினான். வெகுசனங்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியிலே போகிற ஒரு ஆட்டிடையன் அங்கே நின்று சற்று நேரம் பார்த்துத் தேம்பித் தேம்பி ஓயாமல் அழுதான். இருந்தவர்கள் ஆனந்தத்தாலே அழுகிறான் என்று எண்ணி ''ஏன் அழுகிறாய் அழாதே'' என்றார்கள். இடையன் ஐயோ! ''என் மந்தையிலே ஒரு ஆடு இந்த வலியே வரப்பெற்று, கோணக்கோண இழுத்து, யாதொன்றினாலும் பிழையாமல் இறந்து போயிற்று; அது இந்தப் பிள்ளைக்கும் வந்ததே என்று அழுகிறேன்; ஆனால் இவனுக்கு உடனே சூடு போட்டால் ஒரு வேளை பிழைப்பான்'' என்றான். அவர்கள் அவனுடைய அறியாமையைக் கண்டு நகைத்து, அவனைத்திட்டித் துரத்தினார்கள்.

* * *

ஒருவன் பதினாயிரம் வராகன் வைத்திருந்தான். அவன் தனக்கு மரண காலம் சமீபித்ததை அறிந்து, தன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்து ஒவ்வொருவனுக்கு ஐவைந்து பணம் கொடுத்து, இதனாலே வீட்டை நிறையப்பண்ணுகிறவனுக்கு என் பொருளைக் கொடுப்பேன்'' என்றான். அவர்களுள் மூத்தவன் ஐந்து பணத்துக்கும் மலிந்த பண்டமாகிய கருப்பஞ் செத்தை வாங்கி வந்துவீடு நிறையக்கொட்டிப் பரப்பிவைத்தான். இளையவன் மெழுகுவர்த்தி வாங்கி வந்து, ஏற்றி எங்கும் பிரகாசிக்க வைத்தான். பிதா அவ்விரண்டையும் பார்த்து, தீபம் ஏற்றினவனுக்கே பொருளை ஒப்பித்தான் — புத்தி உள்ளவனே பெரியவன்.

* * *

ஒருவன் கடைவீதியிலே இராமாயணப் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு இடைச்சி மூடனாகிய தன்கணவனுக்குப் புத்தி வரும் என்று எண்ணி அவனைப்பார்த்து, '' நீர் இராமாயணங் கேட்டுவாரும்'' என்று அனுப்பினாள். அவன் அப்படியேவந்து மோவாயிலே கோலை ஊன்றி, குனிந்து கொண்டு நின்றான். அங்கே இருந்தவர்களில் ஒரு துட்டன் அவன் முதுகின்மேல் ஏறிக் கொண்டான். அந்த இடையன் பிரசங்கம் முடியும் அளவும் அப்படியே சுமந்துகொண்டு நின்று, பின் வீட்டுக்குப் போனான். '' அவன் மனைவி அவனைப்பார்த்து ''இராமாயணம் எப்படி இருந்தது'' என்றான். '' அது இலகு அன்று; ஒரு ஆட்சுமை இருந்தது '' என்றான். அவள் அதை ஆராய்ந்து அறிந்து, அவன் மடமைக்கு விசனப்பட்டாள்.



# அருள்

நாவலர்

அருளாவது இவை தொடர்புடையவை என்றும், இவை தொடர்பில்லாதவை என்றும் நோக்காது இயல்பாகவே எல்லா உயிர்கண் மேலுஞ் செல்வதாகிய கருணை. அருளெனினும், கருணையெனினும், இரக்கமெனினும் பொருந்தும். உலக இன்பத்துக்குக் காரணம் பொருளே யாதல் போலத் தருமத்துக்குக் காரணம் அருளேயாம்.

அருளென்னும் குணம் யாவரிடத்திருக்குமோ, அவரிடத்தே பழி பாவங்களெல்லாம் சிறிதும் அணுகாது நீங்கிவிடும். வாய்மையாகிய தகழியிலே பொறுமையாகிய திரியை இட்டு, தவமாகிய நெய்யை நிறையப்பெய்து, அருளாகிய விளக்கை ஏற்றினால், அஞ்ஞானமாகிய பேரிருள் ஓட்டெடுப்ப, பதியாகிய மெய்ப்பொருள் வெளிப்படும். மரண பரியந்தம் தன்னுயிரை வருந்திப் பாது காத்தல் போலப் பிற உயிர்களையும் வருந்திப் பாதுகாப்பவன் யாவன். அவனே உயிர்களுக்கெல்லாம் இதஞ் செய்பவனாகி, தான் எந்நாளும் இன்பமே வடிவமாக இருப்பன்.

உயிர்கள் எல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள்; அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகளெல்லாம் கடவுளுக்கு ஆலயங்கள். ஆதலால் கடவுளிடத்து மெய்யன்புடையவர்கள் அக்கடவுளோடு உயிர்களுக்கு உளதாகிய தொடர்பு பற்றி அவ்வுயிர்களிடத்தும் அன்புடையவர்களே யாவார்கள். உயிர்களிடத்து அன்பில்லாதபொழுது கடவுளிடத்து அன்புடையவர் போல் ஒழுகுதல் நாடக யாத்திரையே யன்றி உண்மையன்றென்பது தெள்ளிதிற்றுணியப்படும்: பிறவுயிர்களிடத்து இரக்கமில்லாதவர் தம்முயிருக்கு உறுதி செய்து கொள்ளமாட்டார். ஆதலால், அவர் பிறவுயிர்களிடத்து மாத்திரமா தம்முயிரிடத்தும் இரக்கமில்லாதவரேயாவர். அவர் தமக்குத் தாமே வஞ்சகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள் மனமே கேள்!

புலவர் விசூர்மாணிக்கம்
மானும்பதி-தமிழ்நாடு.

ஏ மனமே! நானும் உன் விருப்பப்படியெல்லாம் உன்னை விட்டுப்பார்க்கிறேன். நீயோ கொஞ்சமும் திருந்துவதாக இல்லை. ம்... உன் புத்தி தெரிந்துதான் இராமலிங்க அடிகளார் உன்னை 'மனமெனுமோர் பேய்க்குரங்கு மடப்பயலே' என்றழைத்தார் போலும். பாழும்மனமே! இனியும் உன் விருப்பப்படி நான் நடப்பேனேயானால் அவ்வளவுதான் என் கதி ...ம்! போனது போகட்டும். இப்போதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. இனியாவது என் சொல்லைக் கேள். நீ மாண்புற வாழ்வாய் மனமே!

வாழ்க்கையில் பொய் பேசாதே, என்கிறேன் நான். ஆனால் நீயோ வள்ளுவரே பொய் பேசலாம் என்று கூறி இருக்கிறாரே என்கிறாய். ம்... நீ என்னவோ ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளையும் கரைத்துக் குடித்தவன் போல பேசுகிறாய். சரி. அப்படியே இருக்கட்டும். உன் இஷ்டம் போலவே வைத்துக்கொள்வோம். வள்ளுவர் எங்கே—எந்தக் குறளில் உன்னைப் பொய் பேசச் சொல்கிறார். ம்... சொல் பார்க்கலாம்.

மனமே! ஓ. அதுவா? அந்தக் குறள் எனக்கும் தெரியும். உனக்கு மட்டும்தான் தெரியும் என்று எண்ணாதே! ம்... அரைகுறையாகப் படித்துவிட்டுப் பொருள் புரியாமல் வீணே புழுங்கிக் கொண்டு வள்ளுவரும் பொய்பேசலாம் என்று சொல்லி இருக்கிறார் என்கிறாயே. ம்...

அட முண்டமே! அவர் எங்கே சொல்லி இருக்கிறார்? காட்டு பார்க்கலாம். அட பாழும் மனமே! இவ்வளவுதானா



நீ கற்றது? ம்- வள்ளுவர் என்ன சொல்லுகிறார். அக்குறளை நீ நன்றாகக்கற்றாயா? அது உனக்குப் புரியவில்லையானால் யாரையாவது கேட்டுத் தொலைக்கக்கூடாதா? ம்... சொல்கிறேன் கேள். குற்றம் தீர்ந்த நன்மையை விளைக்குமானால் பொய்யான சொற்களும் வாய்மை என்று கருதத்தக்க இடத்தைப் பெறுவனவாம். இதோ அந்தக் குறட்பாவையே சொல்கிறேன் கேள்.

**'பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த**
**நன்மை பயக்கும் எனின்'**

மனமே! இக்குறளை நன்றாகப்படி. இதில் பொய் பேசச் சொல்லி உனக்கு எங்கே லைசென்ஸ் வழங்குகிறார் வள்ளுவர். ம்.... காட்டு பார்க்கலாம்.

மனமே! ஏன் விழிக்கிறாய்? சரி—இது போகட்டும். இனிமேலாவது இதுபோல் பேசி மாட்டிக்கொள்ளாதே! அடுத்துச் சில அறிவுரைகளை உனக்குச் சொல்லணும் என்று எண்ணுகிறேன். ம்...சொல்லட்டுமா? மனமே! நீ தினமும் வீணாகப் பொழுதைக் கழிக்கிறாய். அவ்வாறு செய்வது நல்லதல்ல-ம்.... மனிதன் திரும்பப் பெறமுடியாதது காலம் ஒன்றுதான். எனவே, காலத்தை வீணாக்காமல் பயனுள்ள வகையில்வாழ்ந்து வா. அவ்வாறுவாழ்ந்தால் உனக்கும் பெருமை. எனக்கும் பெருமை. ம்... புரியுதா? மனமே மேலும்! ஒன்றைக் கூற விரும்புகிறேன். உயிர்வதை செய்யாதே! மாமிசத்தையும் உண்ணாதே. அப்படியானால் நீ சொல்வாய்! நான் எந்த உயிரையும் கொல்வதில்லை. யாரோ கொன்றபின் விலை கொடுத்துத்தான் மாமிசம் வாங்கி உண்கிறேன். இது கூடவா பாவம் என்றாய் ...ம்...மனமே!

நீ தின்பதால் தானே அவன் கொல்கிறான். நீ தின்பதை விட்டு விட்டால் அவன் ஏன் கொல்லப் போகிறான். மேலும், அந்த ஊனைத்தின்று உன்னுடைய ஊனை வளர்ப்பதில் என்ன லாபம்?ம்.... எவ்வுயிரும் இறைவன் வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி ஆகும். 'எவ்வுயிரும் என்னுயிர் போல்எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே' என்றார் தாயுமானார். எனவே உயிர்க் கொலை புரியாமல் புலால் உண்ணாமல் வாழக் கற்றுக்கொள். இதுபற்றித் தனியாக—விரிவாக—வேறு ஒரு நாளைக்குச் சொல்கிறேன். மனமே! எப்போதுமே,

ஆன்றோர்கள் அறிவுரைப்படி நாம் வாழ்வதுதான் நமக்கும் நல்லது நாட்டுக்கும் நல்லது. அதுசரி. உனக்கு ஒரு கதை தெரியுமா? ம் தெரியாதா? அதுதெரிந்தால் நீயேன் இப்படிக் கிடக்கப் போகிறாய். அதாவது கைவிளக்கை ஏற்றிக்கொண்டு போய் கிணற்றில் விழுவார்களாம் சிலர். அதுபோல நீ படித்திருந்தும் படுகுழியில் விழுந்து அவதிப் படுகிறாய். எனவேதான் 'கல்லாத பேர்களே நல்லவர்கள். நல்லவர்கள், கற்றும் அறிவில்லா என் கன்மத்தை என் சொல்வேன்'' என்றார் தாயுமானார்.

மனமே! இப்போது உனக்கு இளமை ஊஞ்சலாடுகிறது! என்கிறாய். இந்த இளமை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறாயா? ..ம்! அதையெல்லாம் எண்ணிப்பார்த்தால் அடிவயிற்றை முறுக்கும் என்கிறார் வள்ளலார். அதனால்தான் நீ எண்ணிப்பார்க்க அஞ்சுகிறாய் போலும். ம்..! இதோ அவர் பாடலையே கேள்.

'பொய் விளக்கப் புகுகின்றீர் போது கழிக்கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலவென்கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொரு பாழ்ங்கிணற்றில் விழுகின்ற
களியரெனக் களிக்கின்றீர் கருத்திருந்துங் கருதீர்.
ஐவிளக்கு மூப்புமரணதிகளை நினைத்தால்
அடிவயிற்றை முறுக்காதோ? கொடிய முயற்றுலகீர்!

என்று கடுமையாகச் சாடுகின்றாரே அவர். ஏன் தெரியுமாம்...அட பாழும் மனமே! அது உன் போன்ற ஆட்களுக்காகத்தான். 'அருட்பா' வென்றால் என்னவென்றாவது உனக்குத் தெரியுமா? ம் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் இந்தப் பெயர்களையாவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா? ஏ மனமே!



இதற்கெல்லாம் உனக்கு எங்கே நேரம்? ஏதோ கண்டதே காட்சிகொண்டதே கோலம்... என்று வாழ்ந்து கொண்டு இருக்கிறாய். மனமே! நீ எடுத்திருக்கிற பிறவியின் பெருமையை அறிந்திருக்கிறாயா? ம்...அறிந்திருந்தால் நீ ஏன் அவதிப்படுகிறாய் - சுகமாக இருப்பாயே!

மனமே! நமக்கு வாய் படைத்தது எதற்காகத் தெரியுமா?ம்... வெந்ததைத் தின்றுவந்ததைப் பிதற்றவா? இல்லவே இல்லை. இறைவனை வாழ்த்த; நெஞ்சம் எதற்காகத் தெரியுமா? ம்.. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏங்கவா? அதுதான் இல்லை. இறைவனை நினைந்து போற்ற. நமக்குத் தலை கிடைத்தது எதற்காகத் தெரியுமா? சுமைகளைத் தாங்கவா? அல்லவே அல்ல. இறைவனுடைய தாளில் வீழ்ந்து வணங்க.

மனமே! இவைகளையெல்லாம் நீ எங்கே எண்ணிப் பார்க்கிறாய். அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் கவலைப்பட்டுச் சாகின்றாய். அவ்வாறு நீ வாழ்ந்தால் அது உன் தலைவிதிதான். அதை மாற்ற யாரால் ஆகும். மனமே!

'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே.'

என்று கடந்த காலத்தை எண்ணிக் கதறுகின்றார் அப்பர் பெருமான். மேலும், 'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை' என்கிறார் வள்ளுவர். மனமே! உடம்பின் பயன்பற்றி நீ ஒரு போதும் அறிந்து நடந்தாய் இல்லை. நான் என்ன செய்வது? சொன்னாலும் ஏற்க மறுக்கிறாய். உன்னை எப்படித் திருத்துவது என்றே புரியாமல் திகைத்துக் கொண்டிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமே! இறைவனை நினைந்து போற்றாத உடல் உறுப்புக்களால் ஏதும் பயன் இல்லை. இறைவனை நினைந்து போற்றாத உடல் உறுப்புக்களை இராமலிங்கர் எவ்வாறு இழித்துப் பேசுகிறார் என்பதை நீயே கேள். பாடலைப் படிக்கட்டுமா?ம்..!

எந்தைநினை வாழ்த்தாத பேயர்வாய் கூழுக்கும்
ஏக்கற் றிருக்கும் வெறுவாய்
எங்கள் பெருமான்நினை வணங்காத மூடர்தலை
இகழ்விற கெடுக்கும் தலை
கந்தமிகு நின்மேனி காணாத கயவர்கண்
கலநீர் செறிந்த அழுகண்
கடவுள்நின் புகழ்தனைக் கேளாத வீணர்செவி
கைத்திழுவு கேட்கும் செவி
பந்தமற நினைஎணாப் பாவிகள் தம் நெஞ்சம்
பகீரென நடுங்கும் நெஞ்சம்
பரமநின் றிருமுன்னர் குவியாத வஞ்சர் கை
பலியேற்க நீள்கொடுங்கை
கந்தமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே!
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!

ஏமனமே! பாடல் முழுவதையும் பலமுறைபடி, பலமுறைபடித்தாலும் உனக்குப் புத்தி வருமா? என்பது சந்தேகமே. என்ன செய்வது?ம்.. சொல்வதைச்சொன்னேன். கேட்டால் கேள். கேட்காவிட்டால் போ. பின்னால் வருந்திப் பயன் இல்லை. 'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு (வைக்கோல் போர்) போலக் கெடும்' என்பது வள்ளுவன் வாக்கு. மனமே! 'எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிர வருவதோர் நோய்' என்பதும் அவன் வாக்கே. எனவே, வாழ்நாளைப் பாழ்நாளாக்காமல் பயனுள்ள வகையில் வாழ்ந்து சிறக்க நான் சொல்வதைக் கேள் மனமே. கேள்.

நேரிசை வெண்பா

வாழும் வகையற்று வையத்தே வாழ்கின்ற
பாழும் மனமே! பகரக்கேள் – சூழவரும்
தீங்கும் பொடியாகும்; தித்திக்கும் என்பேச்சை
வாங்கி நீ என்வழியே வா.



# அன்னம் பாலிப்புக்கு ஒரு மன்னவன் சுவாமி சர்வாதித்தானந்தா



க. கணபதிப்பிள்ளை B. A. F. R. G. S.
சிவானந்த வித்தியாலய
முன்னாள் அதிபர்

சுவாமி சர்வாதித்தானந்தரீது வாழ்க்கையும், அவரது சமூக சேவையும், அவர் மக்கள்பால் கொண்டிருந்த அன்பும், அவரது சேவையின் திறனும் அளந்தறியக்கூடியன வல்ல. மௌன சாது அவர். மௌன சேவை அவரது சேவை; மறைந்து நின்று தொண்டாற்றும் மாண்பினது அவரது களங்கமில்லாத தூய மனப்பாங்கு; எத்துணைத் தூரத்திற்கு, எத்துணைப் பரப்பிற்கு மனிதனாய்ப் பிறந்த ஒருவனின் சேவை நீடித்து, பரந்து அன்புமயமாய் இருக்கக் கூடுமோ அத்துணை அளவிற்கு அவரது சேவையின் மகத்துவம் வியாபித்திருந்துள்ளது.

மக்களை ஏற்றத் தாழ்வின்றி ஒரே அன்பு வீச்சில்கண்டு அவர்கட்காய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பாவனையுடன் வந்துள்ள மகான் அவர். பளிங்கு போன்ற களங்கமற்ற நெஞ்சம், ஈரமுள்ள மனஈடுபாடு, இரக்கமுள்ள கண்ணோட்டம், என்றும் வற்றா ஊற்றாகிய உளவிரிவு என நாம் எத்துணைப்பக்கம் விரித்துக் கொண்டு போனாலும் அவரது சீலமும், அன்பும் அவ்விரிப்பில் அடங்குவன வல்ல. அவை பெருகிக்கொண்டேயிருக்கும். கான்யாறுபோல் அங்கும், இங்கும் வளைந்து வளைந்து, நெளிந்து மடங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் நீளப்பாய்ந்து பல பக்கமும் வியாபித்துச் செல்லும் இயல்பினது அன்றேரது ஈரமனப்போக்கு.

வாத நோயால் பீடிக்கப்பட்ட தம் இரு கால்களில் நின்று சளையாது இருபது நீண்ட ஆண்டுகளுக்கு; 'பசிக்குது; தாகமாயிருக்கிறது; அன்னம் வழங்குங்கள், குடிநீர் ஊற்றுங்கள்' என்று வந்த யாத்திரிகர்கட்கெல்லாம் மனங்கோணுது, முகம் சுழிக்காது, போதும் போதும் எனச் சொல்லுமளவிற்கு அன்னம் வழங்கி வந்த சாது வள்ளல் ஒருவர் (இவ்விலங்காபுரியில்) உளராகில் அவர் தான் சாது சர்வாதிதானந்தர். இட்லி வேண்டுமா? கொடு. தோசைபிரியமா? பெற்றுக்கொள்: சாதம் வேண்டுமா? போடு; புளிச்சாதம் என்ன! குடிபானம் என்ன! சாம்பார் என்ன! சட்ணி என்ன! இடியப்பம் என்ன! வேண்டிய வேண்டியவர்கட்கெல்லாம், வேண்டிய வேண்டிய அளவில் உண்டிகளைப் பகிர்ந்து, பங்கிட்டு, புன்முறுவலுடன் வழங்கி வந்த அன்னபூர்ணு அம்பாளின் உன்னத உருவம் சுவாமி கைலாசம்— (அவரது மறு பெயர்)

எவரிடமும் அவர் கடும் சொல் பேசியதில்லை, கதிர்காமவேலனின் இராமகிருஷ்ண மடத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு சாதி, மத, இன வேற்றுமை எதுவும் காட்டாது உணவு வசதி, விடுதி வசதி அளித்து அரியபெரிய தொண்டாற்றியவர் இம்மகான். மனித சேவையானது தெய்வ சேவையைப் பிரதிபலித்தது இந்நிலையில்தான்: இம்மகானது சேவையில்தான் மனித உளம் ஆத்மீக நலத்தின் பிறப்பிடம் என நாம் வேதங்களில் கற்றிருக்கலாம், ஆனுல் சாதாரண நாளாந்த நடைமுறையில்தான் நாம் அந்த இணக்கத்தினை இம்மகானிடம் தான் கண்டுகொண்டோம். நற்சேவையே சிவம்! அன்பே சிவம்! சினங்காப்பதே செம்மையே சிவம்! சீவ சேவையே சிவம்! - என்பதை நாம் நம் கண் முன்னே கதிர்காமத்தில் இருபது வருடங்களாகக் கண்ணுற்று வந்துள்ளோம். ஏட்டில் கண்ட வேதத்தினையும்,



பேர்தனையில் கண்ட ஆகமத்தினையும் நாம் இம்மகானது வாழ்க்கைநெறியில், சாதனையில் கண்டுள்ளோம்.

இத்தனை விரிவும் தெய்வீகச் சித்தத்தில் இருந்துள்ளதென்பதற்குப் போதிய சான்றினை இம்மௌன சாதுவின் செயல் ஒவ்வொன்றிலும் கணித்துக்கொண்டோம். தாம் ஒரு சாது என்பதை உற்றேரும், உறவினரும், மற்றேரும் அறிந்துகொள்ள இயலாத முறைப்படி நடந்துகொண்டவர் இச்சாது. அவருக்கு மதிப்பும் வேண்டியதில்லை; சாதுவென்ற மரியாதையும் வேண்டியதில்லை. இவற்றிற்கு அஞ்சி, ஒஞ்சி மறைந்து நின்றவர் அவர். உலகப் போக்கின் சிக்கலான பிரச்சினைகளில் அவர் சிக்கிக் கொண்டதுபோல் எவருக்கும் தெரிந்திலது. அவர் பற்றற்ற சாது. பொருள் எத்துணை வந்து களஞ்சிய அறையினை நிறைத்துவிட்டாலும்சரி களஞ்சியம் வெற்றுன நிலையினை அடைந்துவிட்டாலும்சரி சுவாமி கைலாசம் அவர்கள் மனந்தளம்பாத நிலையில் இருந்துகொண்டே வந்தார். அவரது களஞ்சியத்தில் எப்பொழுதும் நிறைவேயொழிய குறைபாடில்லை. இல்லையென்று முணுமுணுத்துக்கொள்ளாதபடி இரவென்றும், பகலென்றும், நடுநிசியென்றும், நண்பகலென்றும் பாராது அள்ளி அள்ளி அன்னம் பாலித்தவர் இம்மகாசாது.

இவரைப் போல் ஒருவரை இனி நாம் காண்டலரிது. இது மிகையான கூற்று அன்று. மனித உளம் எத்துணை கனிவினையுள்ளதாயிருக்கக் கூடுமோ அத்துணைப்பண்பினை எய்தியுள்ளது தம்பலகாமக் கிராமத்தினைத் தம் பிறப்பிடமாகக் கொண்டுள்ள இம்மகானது உளம். பழுத்த உள்ளம்; பண்பு மேம்பட்ட தெளிவான புத்தி, எவரிடமும் இறங்கிச் செல்லும் ஈரநெஞ்சம், ''செம்புலப்பெய் நீர் போல''க் கசிந்து செல்லும் கண்ணேட்டம்; தெய்வீகத் தோற்றம், கலங்காத புத்தி; இத்தனை மனிதப் பண்புகளும் தெய்வீகநிலையினை எய்தியுள்ளனவென்றுல் அந்நிலையினை நாம் இம்மகான் வாழ்க்கைச் சித்திரத்தில்தான் காணமுடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மகானுடன் பழகுவதற்குப் பாக்கியம்கொண்டுள்ள எவரும் அவரது சிந்தையில் ஈடுபட்டுவிடாநிலையில் இருந்திருக்க முடியாது. கோலத்தில் குறுகிய தவ முனி; குழந்தை மனம்; அன்பு கனிந்த பார்வை; கட்டி டயனைத்துக் காக்கும் நடமாட்டம்; இத்திறனைத்தும் அதாவது மன்னுயிருக்காகத் தன் உயிரையும் ஈயவல்ல இயைபுகள் மனிதன் மாட்டும் உதித்தல் கூடும் என்பதற்கு இலக்காக நின்று சான்று பகர்கின்றன சுவாமிகளது நடத்தைப் படிவங்கள்.

மக்கட் சமுதாயம் எத்துணை முன்னேற்றத்தினை எத்துறையில் எய்திடினும், அஃது ஆத்மீகத் துறையில் முன்னேறாவிடத்து, அதன் முன்னேற்றம் உண்மையான முன்னேற்றமாகா. மனிதன் தேவனானதை நாம் கண்டுள்ளோம். சமூகமும் ஏன் சமுதாயமும்கூட கூட்டான ஒரு தெய்வீக நிலையை அடைவதற்கு போதிய இடமுளது என்பதனை இம்மௌனசாதுவினது வாழ்க்கை சுட்டிக்காட்டி நிற்கிறது.

மனித உளம் குழம்பிய இந்நாட்களில் நம் தெய்வம், எம் தெய்வம் என்று வீண் வாதமிடும் மக்களுக்கு இவரது வாழ்க்கைச் சரித்திரம் என்றென்றும் மங்காப் படிப்பினையாக விளங்கும்.

அவர் நோய்வாய்ப் பட்டிருந்த நாட்கள் பல. ...ய்வு, வாதநோய் போன்ற அசௌகரியங்கள் அவ...க் காலத்துக்குக் காலம் ஏற்பட்டுக்கொண்டேயி...போதிலும் அவரது அந்திய காலத்தில்கூட அவர் வாய்மீறி, நாதவறியாவது தமது உடற்குறைபாடுகளை எடுத்தியம்பினாரில்லை. ஆயினும் அவர் இறக்கும் தறுவாயில் இருக்கும் பொழுது அவரைக் கண்காணித்துவந்த ஒரு தாதி அவரிடம் 'என்ன வேண்டும் சுவாமி' எனவினவிய பொழுது, அதற்கு அவர்; 'எனக்கு வேறு என்ன வேண்டும் சோறுதானே! எனக் குழந்தை' உளப்போங்கில் அத்தாதிக்கு விடையளித்தனர். இதைக் கேள்வியுற்ற அவர் கீழ்க் கதிர்காமத்தில் சமயற்றொழில் புரிந்த ஒரு சமயற்காரர்; லட்சக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கிய வள்ளல் ஒரு பிடிசோறு கேட்டார்? என பிரலாபித்து அழுதார். மக்கள் வாழ்வில் தெய்வமும், குழந்தையும் மாறி மாறி வியாபகம் செய்வது இம்மகான் போன்ற மேதைகள் மாட்டுளது.



# ஸ்ரீமத் சுவாமி
# சர்வாதித்தானந்தஜீமஹராஜ் நினைவு

எஸ். இளையதம்பி - இளைப்பாறிய அதிபர்

வெண்பா (சமாதி நாள்)

சித்தார்த்தி ஐப்பசியிற் சேர்நாள் பதினொன்றில்
நித்யார்த்த நிலைநாடிச் சர்வா — தித்தானந்
தர்சாந்தி சைதன்யக் கைலாயப் பிள்ளைமுழு
நிர்வாண முத்தரானார்.

விருத்தம் (ஆற்றுப் படுதல்)

தம்பலகா மத்துதித்த கைலாயப் பிள்ளை
திருமலையில் விபுலானந் தக்குருவை நாடி
ஐம்புலனைய்ந் தறிவிக்கு மறிவாறு பெற்றாங்
கமையிந்துக் கல்லூரி கலைபயிலு நாளில்
அம்புவியை அசைத்துவிடு மாட்டமா மொன்றும்
அமைவான சமூகத்தை ஆக்கிவிட லொன்றும்
தம்பணியாய்க் கொண்டவிவே கானந்தர் தந்த
தருமநெறி ஆற்றுப்பா டடைநாளு மாக.

கல்லடியுப் போடையிரா மக்கிருஷ்ண வில்லம்
கழறுபுகழ்க் குணமுடைய கணிசமா ணவனாய்
நல்லுலகு குடிசையில் என்றுணரு மட்டும்;
நானறியச் சொல்லுவீர் கண்டீரேல் தேவன்
எல்லீருங் கேண்மினெ''ன எதிர் வினவி நின்றான்
எழின் மேதை தாகூர்நின் வையோகி கண்கள்
நல்லவனே!'' என்றுரைத்த நரேந்திரனின் ஞானம்
நணிபயின்றான் கைலாய நற்பிள்ளை யாண்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுபல தமிழ்முனிவற் கடியோனாய்க் கற்றேன்
அருள்வி ஞா னந்தருடன் அனைத்திலங்கை சென்று
யாண்டுமவர்க் கின்னடிசி லாக்கியளித் தொன்றும்
''யாமறிவோம் வேதவுரை நாலுவகை கூறும்
வேண்டும(ம்) மை உனதிறைவன் அப்பனுமே அற்றாம்
விரிசமுகம் உனதிறைவன் ஏழைகளும் அற்றே
ஈண்டுபணி புரிமற்கு மன்''னென வுரைத்த
இருஞ்ஞானி போதனையும் நனிநாளும் கற்றான்

நாலுவகை யோகமுமோர் நடுபுணையப் பெற்றேன்
''நவிலறனோன் றென்றேபல் மறைகூறும் நாமம்
சாலுமொரு முழுமையே தெய்வமம் முழுமையைச்
சரிநிகர் தெய்வீக ஊற்றாக மக்கள்
காலுபவர் ஆகுநரே ஆதலினால் ஆன்மா
கவின்பெறுதெய்! வீகத்தன் மைத்ததாம்''என்னும்
பாலு கருண் மைசொல்லு ஞானரிஷி மரபில்
பயிலு நணாய்க் கைலாயன் பணிபுரிய லானான்.

**(வேறு மஹராஜாதல்)**

நரபா சங்கள் நலிதரவே நமதுகைலா யப்பிள்ளை
விரஜா னந்தர் குருவாக வினைகள் நீக்கும் வழிகோலிச்
சிரசா வன்னார் அடிதாழ்ந்து சீர்சால் சாந்தி சைதன்ய
மரபா னாமம் பெற்றாராய் மஹராஜாகும் வழி நின்றார்

இராமக் கிருஷ்ண சபைநிறுவி இருந்த கால நூற்றாண்டைக்
இராமம் நகரம் எங்கணுமே கிளர்தல் செய்த காலத்தில்
பராவி சேவை செய்தவராம் பாகர் சாந்தி சைதன்யர்
விராக வாழ்வு முகிழ்த்தக்கால் முப்பா னாண்டும் முதிர்ந்ததுவே

ஆண்டா யிரத்து தொளாயிரத்து நாற்பா னைந்தில்நந்துகடன்
காண்பார் சாந்தி சைதன்யர் கருதி விரஜானந்தகுரு
மாண்டாள் தலைகொள் சர்வாதி தானந்தப் பேர்ப்பட்டமிடப்
பூண்டார் குருஜீ மஹராஜர் குலமும் பற்றும் குமைத்தனரே



**கட்டளைக் கலித்துறை (சேவை)**

ஆண்டுக ளெட்டு மறைவுறச் சங்கத் தலை மையகம்
மாண்புறு சேவை மலிவுறச் செய்த மலைவிலவர்
ஆண்டுக ளேழீமூன் றறுமுகன் ஆடும் கதிரையினில்
வாண்முறை யன்னம் வழங்கிய தெப்போ மறப்பதுவே

**வெண்பா (கதிரையில் அன்னமிடல்)**

மின்வலுவிற் செல்லும் விசைப்பொறியோ மற்றென்னோ
இன்சுவைகொள் சோற்றுக்கறிவாளி—மின்னொளிபோல்
மீளும் விரையும் மிகஇலையில் சேருமொரு
நாளும் புனிதம் அறா

'இம்' மென்றால் இங்கன்னம் 'அம்' மென்றால் அங்கன்னம்
'உம்' மென்றால் உப்புப் புளியளவாம்—அம்மம்ம;
என்னென்று சொல்வேன் இருபானோ ராண்டு
அன்னம் அளித்த கதை

**ஆசிரியப்பா - (நிறைவுகாலம்)**

ஸ்ரீமத் சர்வா தீதா நந்தர்
கதிர்க மத்துச் சாமியே என்பர்
ஆண்டுகள் ஐந்து அப்பணி நீங்க
மீண்டும் தலைமை அகத்திற் கேகி
நீத்த உடம்பு நிலைதளர் வுற்றாங்(கு)
கல்லடி உப்போ டைக்கே கினரால்
பிள்ளைகள் இல்லப் பெரும்பே ரறத்தைப்
பிறழ்விலா தாற்றும் பெருமக ராஜர்
அம்மை அப்பர் அருட்திரு மகர்க்கா
நந்த ஜீவனம் நயக்கும் மகரிஷி
சுவாமி ஜீவ னாநந்தர் அணைப்பில்
சிறிதூஉ காலம் செல்ல இருக்கையில்
நீரிற் குமிழி நிறைந்தது மீண்டுமோர்
நீரிற் குமிழி தோன்றலும்
நியதியா மென்ம நிறைஞான வாரியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் நன்னெறிக் கதை

### ஒரு பல்பு-அவ்வளவுதான்

ஒவ்வொரு ஆன்மாவும் மின்சார பல்பு போன்றது. பல்புகள் நமக்குத்தேவையான ஒலியை மின் நிலையத்திலிருந்து பெறுகின்றன.

உயிர்கள் தமக்கு வேண்டிய சக்தியை பிரபஞ்சத்தின் எல்லையிலா சக்திக்கேந்திரமாக விளங்கும் பிரமத்திடமிருந்து பெறுகின்றன. 'நான் சுதந்திரமானவன்' என பல்பு நினைக்கிறது. அது தனது ஒளி மற்றும் சக்திகுறித்து வீணாகத் தம்பட்டம் அடித்துக்கொள்கிறது.

அதனுடைய மூலாதாரம் பற்றிய எண்ணமே அதற்கு இல்லை. மின்சாரம் தடைப்பட்டுவிட்டால் அது வெட்கத்தால் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்கிறது; வருந்துகிறது; அழுகிறது.

இதுபோல உயிர்களும் அகந்தையால் தற்பெருமை பேசுகின்றன. "எனக்கு எல்லாம் தெரியும்; என்னால் எதையும் செய்ய முடியும்' என்று பேசுகின்றன. ''அது எனது மாளிகை; அவள் என் மனைவி; கடவுள் என்று ஒருவர் இல்லை என்றெல்லாம் அவை பேசுகின்றன.

மனிதனுக்கு மூலாதாரமான பிரமத்தைப்பற்றிய எண்ணம் இல்லை. மனிதன் உண்ணுகிறான்: குடிக்கிறான்; உறங்குகிறான். மனிதன் துன்பமயமான அசுர வாழ்க்கையினை வாழ்கிறான். மனிதன் தனது முதுமைக்காலத்தில் வருந்துகிறான்; அழுகிறான்.

ஏ முட்டாளே! மந்தபுத்தி உடைய மனிதா! மூலாதாரத்தை அறிந்துகொள்; தூய்மை, பக்தி, தவம், தியானம் இவற்றின் மூலமாக இந்த மூலாதாரத்தை அறிந்துகொள்; அதன்மூலம் உன்னதமான அமைதியையும் நிலையான பேரானந்தத்தையும் அடைந்து இன்பமாக இரு.

நீதி- அகந்தையை அகற்று. மூலாதாரத்தை அறிந்து கொள். அப்போது நீ உன்னதமான அமைதியை அடைவாய்.



## கலியுக தர்மம்

கலியுகத்தில் மனிதரிடத்தில் வர்ணாச்சிரம ஆசார நடவடிக்கைகள் இரா. அவையில்லாமையால் இருக்கு, யஜுர் சாமம் என்ற வேதங்களில் சொல்லப்பட்ட யாகாதி கிரியைகளும் இரா. கலிகாலத்தில் தர்மமான திருமணங்கள் நடைபெறா. குரு மாணவமுறையும் இராது. தம்பதிகள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளும் முறைமையும் தர்மமும் இராது. அக்கினியில் செய்யத்தக்க வேத வேள்வி முறைகளும் இல்லை.

எந்தக்குலத்தவனாயினும் பலசாலி எவனோ, அவனே எல்லோருக்கும் அரசனாவான். எல்லா ஜாதிகளிலேயும் பொருள் உள்ளவனே கன்னிகா தானம் செய்யத் தகுதி உடையவனாவானேயன்றி, கல்வி, ஒழுக்கங்கள் உடையவன் அத்தகுதி உடையவனாகமாட்டான். பிராமணன் எந்த வழியினாலும் தீக்ஷிதனாவானேதவிர சாஸ்திர விதிப்படியாவதில்லை. கலியில், விதிக்கப்பட்டதே பிராயச்சித்தம் என்பதில்லை. எந்தக் கிரியையும் பிராயச்சித்தமாக ஏற்பட்டுவிடும். எவனுக்கு எந்த வாக்கியம் பிரியமோ, அதுவே சாஸ்திரமாகும். காளி முதலான எதுவுமே தெய்வமாகக் கொண்டாடப்படும்.

இன்னாருக்கு இன்ன ஆச்சிரமம் என்பதிராது. எவனும் எந்த ஆச்சிரமத்திலும் பிரவேசிப்பான். ஒருவன் தான் விரும்புவதுபோலப் பட்டினி கிடப்பதும், வருந்துவதும், தவஞ்செய்வதும், சாஸ்திர ரீதியான தருமமாகக் கருதப்படும். அந்தப்பொருள் இருந்தாலும், தான் தனவான், என்ற செல்வச் செருக்கு ஜனங்களுக்கு உண்டாகும். அதுபோலவே பெண்களுக்குக் கூந்தல் செவ்வையாக இருந்தாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகி என்ற கர்வம் உண்டாகிவிடும். கலியானது முற்ற முற்றப் பொன்னும் மணியும் நல்லவிதமான ஆடைகளும் அழிந்து போகும் போது, மங்கையர்கள் தங்கள் கூந்தலையே அலங்காரமாகப் பெற்றிருப்பார்கள். மேலும் மங்கையர்கள் பொருளில்லாத கணவனை விட்டு, எவனுயினும் பொருளுடையவனுக இருந்தால், அவனையே புருஷனுகத் தேடிக் கொள்வார்கள். எவன் அதிகமாகப் பொருள் கொடுப்பானே, அவனையே ஜனங்கள் சுவாமி என்று கொள்வார்களே அன்றி, நற்குலம், நற்பிறவி முதலியவற்றைச் சுவாமி என்பதற்கு ஏதுவாகக் கொள்ளமாட்டார்கள்.

கலியுகத்திலே புத்திக்குப் பயன் பொருள் சம்பாதிப்பதே அன்றி, ஆன்ம ஞானம் பயனுகக் கொள்ளப்படமாட்டாது. அந்தப் பொருளும் வீடுகட்டப் பயன் படுமே அல்லாது, யாகாதிகாரியங்களுக்குப் பயன்படாது. அந்த வீடும் தனது போகத்துக்கே பயன்படுமே யன்றி அதிதிகளுக்கு எவ்வளவும் பயன்படாது. மங்கையர்களுக்கனுக இருப்பவனிடத்தில் காதல் கொண்டு உடலாலோ மனதாலோ விபசாரிகளாக இருப்பார்கள். ஆடவரோ அநியாயத்தாலாவது பணஞ் சம்பாதிப்பவரிடத்திலேயே மனம் வைத்திருப்பார்கள். எவர்களும் நண்பர்கள் வேண்டிக் கொண்டாலும் மனம் இரங்காமல், தங்கள் காரியத்தையே பெரிதாக நினைத்து அரைக்கால் பணத்திலும் ஆசைவைத்திருப்பார்கள்.

சூத்திராதிகள், பிராமணரைத் தம்மைப் போன்ற சாதாரண மனிதர்களாக நினைப்பார்களேயல்லாமல், சிறப்புடையவராக நினைக்கமாட்டார்கள். பசுமாடுகளிலும் சனங்களுக்குப் பால் கொடுப்பதுபற்றியே உயர்வானதாகக் கருதப்படுமேயன்றி அதன் ஜாதியைப் பற்றிப் பெருமைபெருது. இக்கொடிய காலத்தில் ஜனங்கள் யாவரும் மழை இல்லாமையைப்பற்றிய அச்சமுடையவர்களாய்ப் பசிக்குப் பயந்தும், சோர்ந்தும் வானத்திலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். மனிதர்கள்



தவமுனிவர்களைப் போலக் காய் கிழங்குகளைப் புசித்துக் கொண்டு மழையில்லாமை முதலியவற்ருல் வருந்தித் தம்மைத் தாமே கொலை செய்துகொள்வார்கள்.

கலிகாலத்தார், சுகம், உல்லாசம் அற்றவராய், திரவியம் க்ஷீணித்தவராய், எப்போதும் பஞ்சத்திலும், துன்பத்திலுமே தவிப்பார்கள். கலி வளர வளர, எவரும் அக்கினி பூஜை, தேவ பூஜை, அதிதிபூஜை, பிண்டோதக தானரூபமான பிதுரு பூஜை முதலியவற்றைச் செய்யாமல், குளிக்காமலுங்கூட உணவருந்திக் காலங்கழிப்பார்கள். ஸ்திரீகள் அதிக ஆசையும் குறுகிய உடலும்கொண்டு பேருண்டி அருந்தி, பல பிள்ளைகளைப்பெற்று, செல்வமின்றி வருந்துவார்கள்; மேலும் இரண்டு கைகளாலும் தலையைச் சொறிந்து கொண்டே, கணவன், மாமனுர், மாமியார் முதலியோரின் கட்டளையை மிகவும் அலட்சியமாய், அவமதித்து வருவார்கள். தேகசுத்தமில்லாமல் தங்களைப் போஷிப்பதிலேயே மனம்ஊன்றி, ஈனமான எண்ணத்துடன், கடினமாயும் பொய்யாயும் பேசுபவர்களாக இருப்பார்கள். குலமங்கையர் தாங்கள் தீயஒழுக்கமுடையவராகையால், அத்தகையோரிடம் நட்புக் கொண்டு தங்கள் புருஷனுக்குப் பலவகையான தீமைகளைச் செய்து வருவார்கள்.

பிரமசாரிகள், விரத அனுஷ்டானம் இன்றியே வேத அத்தியயனம் செய்வார்கள். இல்லறத்தானே. சிறிதும் ஓமஞ் செய்யாதிருப்பதோடு தக்க பொருள்களையும் ஈயார்கள். வானப்பிரஸ்தர், ஊரில் உள்ளவற்றையே புசித்து வருவார்கள். ஆட்சியாளர்கள், மக்களைப் பரிபாலனஞ் செய்வதை முக்கியமாக எண்ணுமல், அந்தவரி, இந்தவரி என்று எதையாவது சாக்கிட்டு குடிமக்களின் பொருள்களைப் பறிப்பார்கள். எவன் யானை, குதிரை முதலிய சேனைகளை வைத்திருக்கிருனே அவனவனே அரசனுவான். பலமற்றவன் சேவகனுவான். வைசியர்கள் பயிர் செய்தல், வாணிபம் செய்தல், முதலிய தமது தொழிலைவிட்டு சூத்திரரது தொழிலாகிய பல தொழில்களையும் செய்து பிழைப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரரோ, சந்நியாசியின் சின்னங்களை அணிந்து, பிக்ஷைவாங்கி உண்டு அநேகர் தங்களைப் பூசிக்கும்படியான போலிப் பிழைப்பில் ஜீவிப்பார்கள். மக்கள் பஞ்சத்திலும், வரி இறுத்தலாலும் துன்பம் அடைந்து கோதுமை, யவம் விளையும் நீசத் தேசங்களுக்குப்போய் விடுவார்கள். இவ்விதமாக வர்ணாச்சிரம தர்மங்கள் கெட்டுப் போய் வேதமார்க்கமே மறைந்து போவதால், மக்கள் பாஷாண்டமதங்களைப் பின்பற்றி விடுவார்கள். இதனால் அதர்மம் விருத்தியாகும். அதனால் மக்கள் அதர்மமாக நடக்கத் தொடங்கிவிடுவார்கள். அதனால் அதர்மம் வளர்ந்து, மக்களின் ஆயுள் அற்பமாகிவிடும். ஆட்சியாளரின் குற்றத்தால், மக்கள் சாஸ்திரங்களுக்கு விரோதமான, வீணான தவங்களைச் செய்வார்கள். ஆகையால் இளமையிலேயே மரணம் உண்டாகும். பெண்கள் ஆறு ஏழு வயதுக்குள்ளாகவே பிள்ளைகளைப் பெறுவார்கள். ஆண்களோ ஒன்பது பத்துவயதிற்குள் பிள்ளையை உண்டாக்கும் திறமையுடையவர்களாக இருப்பார்கள். பன்னிரண்டு வயதுக்குள்ளாகவே நரை, திரை, முதலியன உண்டாகும். இந்தக் கலியின் முதிர்ச்சியில் மக்கள் இருபது வயதுக்குமேல் பிழைத்திருப்பதில்லை. கலியுகத்தில் மக்கள் அற்பஞானமுடையவர்களாகவும் வீணான தவ வேடங்களைப் பூண்டு கெட்ட நினைப்புக் கொண்டவர்களாகவே இருப்பார்கள். அதனால் விரைவில் நசித்துப் போவார்கள்.

– விஷ்ணு புராணம்

(தொடரும்)

---

**இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.**

**இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால், நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.**

**கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும் உனக்கு போதிக்கும் அருள்வடிவாகிய ஆசாரியர் ஒருவரே உன் உயிர்த்துணை; ஆதலால், அவரை ஒருகாலமும் மறவாதே.**

–ஆறுமுக நாவலர்

---



# ஐயம் தெளிதல்

## மோட்சம் என்பது என்ன? அதில் பல தரங்களுண்டா?

மோட்சம் என்னும் சொல்லிற்கு விடுதலை என்று பொருள். விடுதலை என்றால் நம்மைக் கட்டுப்படுத்தி நம்முடைய சுதந்திரத்தைத் தடுக்கிற ஏதோ ஒருவித பந்தத்திலிருந்து விடுதலை படுதல் எனப் பொருள்படும். நாம் எத்தனையோ பந்தங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிறோம். அவை ஒவ்வொன்றிலுமிருந்து கடைத்தேறுவது ஒருவித மோட்சந்தான். மனித முன்னேற்றம் என்று சொல்வது இத்தகைய கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலைபடுவதுதான். நாகரிகம் உள்ள ஒரு மனிதன் தன்சீவியத்தில் ஒவ்வொரு விநாடியும் ஏதாவது ஒரு பந்தத்திலிருந்து மோட்சம் அடைந்து கொண்டே இருக்கிறான். தன்னிடத்திலுள்ள ஒரு தோஷத்தை உணர்ந்து அதைக் கடக்கும்போது அந்தப் பந்தத்திலிருந்து விமோசனம் அடைகிறான். ஆனால் நாம் சாதாரணமாக மோட்சம் என்று கூறுவது கடைசி பந்தத்தைக் கடந்து சர்வ சுதந்திரனாவதைக் குறிக்கும்.

### அந்தக் கடைசிப் பந்தம் என்ன?

ஞானமார்க்கத்தில் அது அவித்யை (அஞ்ஞானமாகிய இருள்), பக்திமார்க்கத்தில் வேற்றுமை (ஒற்றுமையை மறைப்பது), கர்ம மார்க்கத்தில் சோம்பல், இந்தக்கடைசி மோட்சந்தான் உத்தம மோட்சம்; மற்ற மோட்சங்கள் அதற்குச் செல்லும் வழியிலுள்ள பலபடிகள்.

சாதாரணமாக முத்தியைக் குறித்துப் பேசும்போது ஜனன-மரண சக்கரத்திலிருந்து விடுபடுவதுதான்மோட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பலர் எண்ணுவதுண்டு; கூறுவதுமுண்டு. யோசித்துப் பார்த்தால் இந்த முத்தி உண்மையான மோட்சமாகாது. ஜனன மரண சக்கரத்தில் நம்மை ஈடுபடுத்துவது நமது கர்ம பந்தம். இந்தப் பந்தத்தை இல்லாமல் செய்தால் நம்மை திரிலோகவாசம் செய்யக் கட்டாயப் படுத்த காரணமில்லாமல் போகிறது. ஜனன மரண சக்கரமாகிய திரிலோக சஞ்சாரம் அவசியமில்லை. இது ஒருவித மோட்சந்தான். ஆனால் இது சாஸ்வதமல்ல. கொஞ்சக்காலம்-ஒருமன்வந்திர காலம்கூட-இந்தநிலையில் ஜனன மரணத்திற்குட்படாமல் சுவர்க்கத்திலேயே வாசம் செய்யலாம். பிறகு அந்தச் சக்கரத்திலும் படவேண்டி வரும். உண்மையான சாஸ்வத மோட்சம் அவித்யை (அஞ்ஞானம்), வேற்றுமை என்பதிலிருந்து விடுபடுவது தான். வேற்றுமை பாவம் அஞ்ஞானத்தால் ஏற்படுகிறது. ''நான் வேறு நீ வேறு என்று நினைக்கும் வேற்றுமை பாவம் தான் கடைசி அஞ்ஞானம். இந்த இருள் நீங்கினால் பூரண ஞானம் ஜொலிக்கும். உலகம் முழுதும் ஒரே உயிர், உலகில் ஒரே சக்திதான் பிரவிர்த்திக்கிறது என்கிற அனுபவம் ஏற்படும். ''எனக்கு மறுபடி ஜனனமுண்டா?'' என்கிற கேள்விக்கே இடமில்லை. சகல ஜீவராசிகளோடு ஐக்கியத்தை அனுபவிக்கும் ஞானிக்கு ''தான் தன்னுடைய முக்தி'' என்கிற மனோபாவமேதும் உலகத்தின் நலத்தையே நாடுபவன், சோகசங்கிரகத்திற்காக இந்தப் புவியில் ஜன்மம் எடுக்கவேண்டியிருந்தால் சந்தோஷமாக ஜன்மம் எடுப்பான். அப்படி எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் அவனுக்குக் கிடையாது; ஆனால் தானாகவே பிரபஞ்சத்தின் நலத்திற்காக பிறவிப் பிணியை மேற்கொள்வான். இதுதான் உத்தம மோட்சம்.

**''தர்மஜோதி''**

---

**ஈசுவரபத்தியும், நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.**

**தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.** – ஆறுமுகநாவலர்

---



**சுவாமி ராமதாஸ் அருளுரைகள் (38)**

# சும்மா இருப்பது சுகமானதன்று

**தமிழ் வடிவம்:- ம. சி. சிதம்பரப்பிள்ளை**

நாடோடியாக அலையும் சாது ஒருவர், ஒருமுறை ஒரு கிராமத்தை அடைந்து அங்குள்ள ஆலயத்தில் ஒருசில நாட்கள் தங்கி விட்டார். ஆலயத்தில் உள்ள மண்டபம் ஒன்றில் அமைதியாக அமர்ந்தார். வெளியே போவது கிடையாது. எப்போதும் அதே இடம்தான். ஆலயத்தில் உள்ள பூசாரியார், இந்தச் சாதுவின் சாந்தத்தையும் அமைதியான நடவடிக்கையையும் கவனித்து, ஆண்டவனுக்கு நிவேதிக்கும் நைவேத்தியத்தில், பூசைக்குப் பின்பு, ஒரு பகுதியை, சாதுவின் மதிய போசனமாக இருக்கட்டும் என எண்ணிக் கொண்டு, கொடுத்து வந்தார். இவ்வாறு ஒருநாள் ஒரு உணவு என உண்டு இருப்பார். இவ்வாறுக நாட்கள் பல உருண்டன. வழக்கமாகச் சோதனை செய்யும் ஆலய பரிபாலன நிர்வாகஸ்தர் அன்றொருநாள் ஆலயத்துக்கு வந்தார். பூசாரியார் அங்கமர்ந்திருந்த சாமியாருக்கு நைவேத்தியத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பதைப் பார்த்து விட்டார். மனேச்சராகிய நிர்வாகஸ்தருக்கு பூசாரியாரின் செய்கை மனதுக்குப் பிடிக்க வில்லை. பூசாரியாரை நோக்கி '' இந்தச் சோம்பித்திரியும் மனிதனுக்கு எதற்காக ஊட்டுகின்றீர். மந்தம் மூடியவனாக, ஒன்றும் செய்யாதவனாக அசையாமல் ஆடாமல் இருக்கிறானே! ஏன் உணவு? இவ்விதமானவர்களுக்கு இலவசமாக உணவு இடுவது பாவச் செயலாகும். இனிமேல் இவனுக்கு இவ்வாறு செய்யவேண்டாம்'' என்று உத்தரவு பிறப்பித்தான்.

பூசாரி கீழ்ப்படிந்தார். சாது இதனைப் பற்றி அதிக சிரத்தை எடுக்கவில்லை. மதியவேளைகளில் இரண்டொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளுக்குச் சென்று தனது பசியைப் போக்கி விட்டு அரைமணி நேரத்தில் ஆலயத்துக்கு வந்து அதே இடத்தில் ஆற அமர இருந்துவிடுவார். மறுநாள்வரை அந்த மாதிரியே இருந்து கொள்வார். இவ்வாறு ஆலயத்துள் இருந்துவரலானார்.

ஒரு கிழமை கழிந்தன. கோவில் மனேஜர் ஆலயத்துக்கு வந்தார். சாது முன்பு இருந்த இடத்திலேயே இன்பகரமான வதனத்துடன் பேசாது அமர்ந்திருந்தார். கோவிலிலிருந்து ஒருவிதமான உணவும் பெறுவதில்லையென்றும் கிராமத்துள் சென்று பிச்சையேற்றுண்டு பசி போக்குகின்றார் என்றும் பூசாரி பகரக் கேட்டறிந்து கொண்டார் மனேஜர்.

இந்தச் சாதுவின் மீது மனேஜருக்கு கவனம் ஈர்க்க ஆரம்பித்துவிட்டது. இவர் எதற்காக ஒரே இடத்தில், நாள் முற்றும், ஒரு வேலையும் செய்யாது இருக்கின்றார். இதனைச் சாதுவிடம் கேட்டுவிடவேண்டுமென எண்ணி அவரண்டை சென்று' ''சாதுஜி! ஒரு இடமும் செல்லாது இவ்வாறு இருப்பதின் இரகசியம் யாதோ?'' கூறுக என்றார்.

சாது கூறினர். ''நான் உமது வினவுக்கு ஐந்து நிமிடத்துள் விடைபகர்வேன். அதுவரை பொறுத்துக்கொள்ளவும்'' என்றார். மனேஜர் அவ்வாறு இருந்தார். ஐந்து நிமிடம் சென்று விட்டது. சாதுவிடமிருந்து பதில் இல்லை. மனேஜர் ஞாபகப்படுத்தினார். சாது மீண்டும் கூறினர். ''சகோதர! இன்னுமொரு ஐந்து நிமிடம் இருப்பீரா பதில் தர''எனக் கேட்டார். சிறிது அமைதி இழந்தவராக, ''சரிவேண்டுமாகில் ஒரு ஐந்து நிமிடம் தாமதிக்கின்றேன். அதற்குமேல் இல்லை'' என்றார்.

பின்பும் ஐந்து நிமிடம் பறந்தன. மீண்டும் சாது அமைதியில் ஆழ்ந்தார். மனேஜர் சாதுவைக்கடுமையாகப் பார்த்து, ''இது என்ன சாதுஜி! பத்து நிமிடங்கள் கழிந்துவிட்டன. பதிலைக்காணோமே?'' என்றார். சாது மீண்டும்மிகவும் அமைதியாகவும் நிதானமாகவும் ''சகோதர! இன்னுமொரு ஐந்து நிமிடம் தாமதித்தீரானால் பதில் கூறிவிடுவேன்'' என்றார். மனேஜர் பொறுமையிழந்து பரபரப்படையலானார். மணிக்கூட்டைக் கையில் எடுத்துக்கொண்டு சாதுவைப் பார்த்து முடிவாகக் கூறினார். ''சாதுஜி! இங்கே பாரும்! எனது வேலைகள் யாவும் தாமதமாகின்றன. உம்மைப் போன்று காலத்தை வீணாக்க இயலாது. உமது பதிலுக்கு கடைசியாக ஐந்து நிமிடம் தருகின்றேன். எனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யாது விடின் இந்த இடத்தில் நிற்கமாட்டேன்'' என்றார்.



மனேஜர் ஐந்து நிமிடம் நின்றார். பதில் வரவில்லை. சிறிது கோபமாக மனத்தில் முணுமுணுத்தவண்ணம் ஆலயத்தைவிட்டுச் சென்றுவிட்டார். ஒருசில யார்தூரம் சென்று யோசிக்கலானார். ''என்னால் ஒரு பதினைந்து நிமிடம் சும்மா இருக்க இயலவில்லை. இந்தச் சாதுவோ இதே இடத்தில் தொடர்ந்து இருபத்துநான்கு மணி நேரமாக – ஒருசிறு இடைவேளை தவிர – இருப்பது என்பது அதிசயமே! ஒரு பிரமாண்டமான சக்தி-மனதை அடக்க இவரிடம் இருக்கின்றது'' என்று எண்ணியவாறு, சாதுவிடம் அவருக்கு ஒரு அபூர்வமான பயபக்தி வளர்ந்துவிட்டது. ஆலயத்துக்கு மீண்டும் வந்து, பூசாரியை அழைத்து, ''இந்தச் சாது இவ்வாலயத்தில் தங்கும் வரை, நீர் அவருக்குமுன் தந்த மாதிரி நைவேத்தியம் கொடுத்துவாரும்'' எனக்கட்டளையிட்டார். சாதுவைப் பார்த்து மிகவும் தாழ்ந்து சிரம் காட்டி வணங்கிய பின்பு சென்றுவிட்டார்.

உண்மையில், ஒரே இடத்தில் திடமாக இருப்பது ஒரு வேடிக்கையானவிடயமன்று. ஆண்டவன்மீது மனதை ஆளப்பதித்த அபூர்வ ஆன்மாக்களுக்கன்றி, இது கைவரும் சாதனையன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் உணவு மாமிசமா மரக்கறியா?

மாத்தளை — அருணேசர்

சென்ற இதழ்த் தொடர்ச்சி

## பெரும்பாடு

மாமிசத்தை அதிகமாகப் புசிக்கும் பெண்களுக்கு இவ் வியாதி அதிகம் வருகிறது என வைத்தியர்கள் கூறுகின்றனர். ஆஸ்திரேலியாக் கண்டத்தில் உழைப்பாளிகளான பக்குவமடைந்த இளம் பெண்கள் மாமிசங்களை முக்கியமாகத் தின்பதினால் அவர்களெல்லோருக்கும் பெரும்பாடு என்னும் உதிரப்பெருக்கு நோய் உண்டாயிருப்பதாக டாக்டர் பெர்க்ஸ் என்னும் அமெரிக்கவைத்தியர் கூறியுள்ளார்.

## இருதய ரோகம்

மாமிச உணவு தேவைக்குமேல் இரத்தத்தில் பிப்ரின் **(Fibrin)** என்ற தசையை வளர்த்து வருகின்றதனால் உடம்பில் அளவுக்குமீறிச் சூடுண்டாகிறது. சூடேறுவதால் தனித்தன்மையான சுறுசுறுப்பும் அலைப்பும் உண்டாகிறது. இதன் முடிவோ நரம்புத் தளர்ச்சியினால் துன்புறும்படி செய்து விடுகிறது.

அதனோடு, மாமிசத்தை ஓயாமல் உண்பதால் இரத்தாசயமாகிய இருதயத்தின் தொழில் அதிகப்படுகிறது. அதனால் உயிர் வலிமையெல்லாம் குன்றிவிடுகிறது. இதுவே இருதய ரோகத்திற்கும் காரணமாகிறது. இதனை ஆசிரியர் சிட்னிபோர்டு நன்கு ஆராய்ந்து கூறியுள்ளார்.

## மாரடைப்பு

இந்நோய் ஏற்படுவது ஏன் என்பதைப் பற்றியும், முதிய பருவத்தில் இது அடிக்கடி ஏற்படுவானேன் என்பதைப் பற்றியும் கலிபோர்னியா பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழுவினர் சில ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து முடிவு கண்டுபிடித்துள்ளனர். இந்த மாரடைப்புக்குக் காரணம் ''கோலோ ஸ்ட்ரால்'' என்றும், இது மாமிசம், முட்டை, வெண்ணெய் இவைகளில் இருக்கிறதென்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இந்த கோலோஸ்ட்ராலில் பிசுபிசுப்பான ஒரு பொருள் உற்பத்தியாகிறதென்றும், அதுதான் மாரடைப்பிற்குக் காரணமென்றும் ஆராய்ச்சியில் அறியப்பட்டிருக்கிறது. இந்த பிசுபிசுப்புப் பொருள் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் அதிகமாக இரத்தத்தில் உண்டாகிறது என்றும், அதனால் மாரடைப்பில் (Heart failiur) இறப்பவர்கள் ஆண்களே என்றும் அவர்கள் கூறுகின்றார்கள்.

## எலும்புருக்கி நோய்

இந்த நோய் மீன் இறைச்சியிலிருந்தும், செம்மறி ஆட்டின் இறைச்சியிலிருந்தும் உண்டாகின்றதென்று புரபசர் பேப்ஸ் என்பார் நோயாளிகளை நேரில் ஆராய்ந்து கண்ட உண்மைகளைக் கொண்டு உறுதியாகக் கூறியுள்ளார்

இவ்விதமாக, மாமிச உணவே ஒவ்வொரு வகையான நோய்க்கும் முதன்மையான காரணமாயிருக்கிறதென்பதை மேற்கூறப்பட்ட பற்பல புகழ்வாய்ந்த வைத்தியக் கலை நிபுணர்களின் ஆராய்ச்சி அநுபவங்களினால் தெளிவாய் அறிந்து கொள்ளலாம். இன்னும் கேளும் மாமிச உணவுக்காரரே:

## மாமிச உணவு ஆயுளைக் குறைக்கிறது

முற்கூறப்பட்டபடி மாமிச உணவு பலவித நோய்களை உண்டுபண்ணுவதனால், அதனைப் புசிக்கும் மனிதனின் உடல் மிகவிரைவில் தளர்ச்சியடைந்து ஆயுசும் குறைகிறது. மாமிசம் உண்பவனுடைய இருதயம் அதை உண்ணாதவனுடைய இருதயத்தைவிட, நாளொன்றுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 ஆயிரந்தடவை அதிகமாக அடிப்பதாய் டாக்டர் ஜே. ஹைரன் என்பார் கூறியுள்ளதையும் காண்க.

மாமிசம் உண்பவர்களுக்கு ஆயுள் குறைவதோடு அவர்களுக்கு வரும் நோயையும் குணப்படுத்துவது கடினம் என்பதாய்ப் பல வைத்தியர்கள் கூறியுள்ளனர். அவ் வைத்தியர்களே, மரக்கறி பதார்த்தங்களை உண்பவர்களுக்கு வரும் நோயை எளிதாகச் சுகப்படுத்திவிடலாம் என்றும் கூறியுள்ளார்கள். அதனோடு சைவச்சாப்பாட்டுக்காரர்களுக்கு உக்கிரமும் குறைவென்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

டாக்டர் ஜோர்ஸெயா ஓல்டுபீல்டு என்ற புகழ்பெற்ற வைத்தியாசிரியர்:- மாமிசமானது கொடிய நோய்களான பிளவை, சுரம், கசம், குஷ்டம், வாதம், பாரிசவாயு, குடல் புழுக்கள் முதலியவற்றிற்கு காரணமாயிருக்கிறதென்றும், 100-க்கு 99 பேர்களைக் கொல்லுகின்ற நோய்களுக்கு முக்கிய காரணங்களில் மாமிசமும் ஒன்றென்பதில் சிறிதும் சந்தேகமில்லை என்றும், அறுவைச் சிகிச்சைப் பரிசீலனையில் மாமிசம் உண்பவர்களுக்குப் புண்களின் உக்கிரம் அதிகமென்றும் புண்கள் விரைவில் ஆறமாட்டாவென்றும், ஆனால் மரக்கறி உண்பவர்களுக்கு அறுவை வைத்தியச் சிகிச்சையில் மேற்கூறப்பட்ட துன்பங்களெல்லாம் குறைவென்றும் சொல்லுகின்றார்.

இதனால்தான் நல்ல வைத்தியர்கள் நோயாளிகளுக்குப் பத்தியம் நியமிக்கும்போது மாமிசம் முதலிய கெட்ட பதார்த்தங்களை உண்ணக் கூடாதெனக் கட்டளையிடுகிறார்கள்.

இதனை அறியாமல் நம் வைத்தியர்களிற் சிலர் எந்த வியாதி வந்தாலும் கோழிக்குஞ்சை அவித்து (சூப்) குடிக்கும்படி சொல்லுகிறார்கள். இவர்களுக்கு இதையன்றி வேறெவ்விதமான பரிகாரமும் தெரியாதுபோலும்!



இவர்களின் சொல்லைக் கேட்டு சில நோயாளிகள் நூற்றுக்கணக்கில் கோழிக் குஞ்சுகளை 'சூப்' வைப்பதற்காகக் கொன்றுதள்ளுகிறார்கள்! கோழிக்குஞ்சாகிய மாமிசம் வியாதியை அதிகப்படுத்துமேயல்லாமல் குறைக்க மாட்டாது என்பது பெரிய பெரிய வைத்தியர்களின் கருத்தாயிருக்க, கொஞ்சம் கற்ற சில சிறு வைத்தியர்களின் கருத்தே கோழிக் குஞ்சு சூப்பு, ஆட்டெலும்புச் சூப்பு இல்லாவிடில் வியாதி குணப்படாது என்பதாயிருக்கிறது! இம்மூட அபிப்பிராயம் மாமிசம் உண்ணும் பழக்கமுடைய சில வைத்தியர்களிடையே மிகவும் பலமாயிருக்கிறது.

மேல்நாட்டு வைத்தியம் கற்றவர்கள் அனைவருமே இவ்வித முறைகளையே கைக்கொண்டுள்ளார்கள். மேல்நாட்டவர் பெரும்பாலும் சாதாரணமாய் மாமிசமும் ரொட்டியுமே புசிப்பதை நித்திய வழக்கமாகக் கொண்டவர்களாதலால், அந்நாட்டில் அவர்களின் வழக்கத்திற்கேற்றபடியே மருந்துமுறையும் பத்தியபாகமும் நியமித்துள்ளார்கள்.

நம்நாடுகளின் உணவுமுறைக்கும் மேல் நாட்டவரின் உணவு முறைக்கும் மிக்க வித்தியாசம் உள்ளது. நம் நாட்டவரைப்போல் மேல்நாட்டவர் சோறு குழம்புகளை நித்திய உணவாகக் கொண்டிருக்கவில்லை. அவர்களை நம் நாட்டு உணவுப் போக்குக்கேற்றபடி மருந்தையும் பத்திய முறைகளையும் ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தினால் அவர்கள் சம்மதித்துச் சாப்பிடுவார்களா? சாப்பிடத்தான் முடியுமா? சாப்பிட்டாலும் ஒத்துக்கொள்ளுமா? அதுபோலத்தான் நம் நாட்டவர்களுக்கேற்றபடி வைத்திய முறைகளில் உணவு நியமனம் நமக்கேற்றதாயிருக்க வேண்டுமென்பது.

இதனால்தான் நம்நாட்டுப் பழைய வைத்திய முறைகளிலும் சாகபதார்த்தங்களே—தாவரங்களே நியமிக்கப்பட்டுள்ளது. இக்கால ஆங்கில முறைகளைக் கற்றவர்கள் இவற்றைக் கவனிப்பதற்கில்லை. அதனாலேதான் அவர்கள் தாம் கற்ற மேல்நாட்டு முறைகளையே வற்புறுத்தவேண்டியதாயிருக்கிறது. அந்தந்த நாட்டில் எளிதாயும் சாதாரணமாயும் கிடைக்கக்கூடிய உணவு வகைகளுக்கு ஏற்றபடி அவ்வந்நாட்டில் பத்திய உணவுகளைக் கைக்கொள்ளச் செய்யவேண்டுவதுதான் நன்மையைத் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் தமிழுலகை உய்வித்தவை
# நாவலரது
## வசனநடை நூல்களே

சித்தாந்த சாகரஞ் செந்தமிழ்ப்பேழை திகழ் மதுரம்
பத்தோடு மேலெண் புராணக் களஞ்சியம் பாங்குசிவ
வித்தான திட்ட விளைநில மென்று விளம்புகின்ற
முத்தான வாறுமுக நாவல ரெம்முடி மணியே.

அறிவுறுத்தப்படவேண்டிய பொருளினை விக்க தாக்கமின்றிச் செவ்விதின் உணர்த்தும் பொருட்டு ஓசையளவினையும் பொருளேற்றத்தினையும் ஒருசேரப்பெற்ற வடமொழிச் சொற்களை மாத்திரமே இடுமிடங்கண்டு பொறித்துச் செல்லும் செலப்பாட்டை நாவலரவர்களது நூல்கள் தாமே பெற்று நிற்கின்றன. —சி. சரவணர்

செய்யுணடை வாய்ந்த நக்கீர் உரைநடையும், விளங்கக் குறைந்த இளம்பூரணமும், கட்டுரைச் சுவை செறிந்த சேனாவரையரது இலக்கணநடையும் பொருட்செறிவுடைய பேராசிரியர் உரைநடையும், தங்கோணிறுத்தும் நச்சினார்க்கினியர் சொன்னடையும், நாவலரவர்களின் வசனநடைகளிலேயே வந்து முடிகின்றன. —சபாபதி நாவலர்

ஐந்தாஞ் சமய குரவராகவும், அண்மைக்காலத் துரையாசிரியராகவும், தோன்றிய நாவலர் பெருமானின் வசனநடை நூல்களே சைவத் தமிழுலகை உய்வித்தவை.
—அம்பலவாண நாவலர்

'வசனநடை கைவந்த வல்லாளர்'
—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி

தூர மொழிகளில் சிறந்து கிடந்த குறியீட்டிலக்கணத்தையும், அதன் மாத்திரைக் கணக்கினையும் நியமித்துதவிய நாவலரவர்கள் தமிழுரைநடைகளின் தாதையார்.
—மணி திருநாவுக்கரசு முதலியார்



# இந்துமத வினாவிடை

நாகர் கோயில் கே. ஆறுமுகநாவலர்

முன் தொடர்ச்சி

83. மகேசன் யார்?

ஆண்டவனது உருவத்திரு மேனிகளான மகேசன், உருத்திரன், மால் அயன் என்ற நான்கினுள்ளும் முதலாவதும், தலை சிறந்ததுமான உருவத்தினைக் கொண்டவரே இவர். இவர் பரமேஸ்வரன் என்றும் அழைக்கப்படுவார்.

84. இந்தத் திருஉருவத்தின் அமைப்பு யாது?

பிறையினையும் கங்கையையும் சடாமுடியினிடத்தே தரித்து, பாம்பினை மாலையாகவுடையவராய்த் திருநீறு அணிந்து சக்தியை ஒருபாகத்தில் அமர்த்தி ரிஷபவாஹன ஆரூடராயிருப்பதாம்.

85. இவரது வாகனம் நந்தி யென்ற வெள்ளைமாடு என்பது ஏன்?

நந்தி தர்ம சொரூபம், இது சமம், விசாரம் சந்தோஷம், சாது சங்கமாகிய நான்கு குணங்களையும் நான்கு கால்களாகக் கொண்டிருக்கிறது நந்தியின் மீது பரமேஸ்வரன் ஆரோகணிப்பது. இந்நான்கு வகை ஆத்ம குணங்களையுங் கொண்ட உயிர்களிடத்து மாத்திரமே இறைவன் எழுந்தருளி வீற்றிருந்து அருள் செய்வன் என்னும் தத்துவத்தை விளக்குவதாகும்.

86. இவர் வெண்ணீறணிந்திருப்பதேன்?

நிலையாமையை உணர்த்தி அருளொளி நல்கி எல்லாவுயிர்கட்கும் நற்பயனளிக்க இவர் வெண்ணீறணிந்திருக்கின்றார். நாமும் இவரைப்போல் வெண்ணீறணிய வேண்டும் என்பதையும் இது காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. இவர் அரவம் அணிந்திருப்பது எதை உணர்த்துகிறது.
அரவம் அணிவதால் உலகத்தினை இயக்கும் தனது சக்தியை உணர்த்துகிருர்.

88. இவர் மறை ஒதுவது எதற்கு?
நமக்கு அறிவினைத் தருதற்பொருட்டும் நாமும் அது போல் ஓதுதற் பொருட்டும் இவர் இங்ஙனம் செய்கின்ருர்.

89. சடையில் கங்கை தரித்திருப்பதேன்?
பகீரதன் தன் மூதாதையரையெழுப்ப தேவகங்கா நதியைத் தவவலிமையால் பூவுலகுக்குக் கொணர்ந்தான், அது உலகத்தை அழித்துவிடக் கூடுமாதலால் அதனை இறைவன் தன் சடையில் வாங்கிச் சிறிது உலகத்திற்குத் தந்தனன் என்பது வரலாறு. இதனை உற்று நோக்குவார் இறைவன் இரண்டாவது மனைவியாகக் கங்கையை வைத்துள்ளார் என்று கூறுர். இறைவனைத் தரிசிக்காதவிடத்து உயிர் பரிசுத்தம் பெருது என்பது இதன் தத்துவார்த்தமாம்.

90. இவர் மூன்ரும் பிறைச் சந்திரன் அணிந்திருப்பது எதைக் குறிக்கும்?
தக்கனுல் அடைந்த பெருஞ்சாபத்தினை நீக்கச் சந்திரன் இறைவனை அடைக்கலம்புக, அவன் அதை நீக்கி இரட்சித்துச் சடைமுடியில் தரித்துக்கொண்டான் என்பது வரலாறு. இஃது இறைவன் தன்னை அன்புடன் அடைந்தவரைக் காத்து இரட்சிப்பான் என்பதை உணர்த்துகின்றது.

91. இவர்தம் சக்தி யார்?
மகேசை அல்லது பார்வதி.

92. பார்வதிக்குப் பாதி உடல் கொடுத்தார் என்பதன் கருத்தென்ன?
இவர் வேறு இவரது சக்தி வேறு அல்ல என்பதை இது குறிக்கின்றது.



# ஆத்ம சிந்தனை

ஸ்ரீகங்காதரன் - அரவிந்தாச்சிரமம் - புதுவை

சென்ற இதழ் தொடர்ச்சி

## மரணத்துக்குப் பின்

ஜீவ ஜகத் பரம், இம் மூன்றும் அநாதியானவை. இவை ஒரு காலத்திலிருந்து மற்ருெரு காலத்தில் இல்லாமற் போவது என்பதின்றி முக்காலங்களிலும் இருக்கக் கூடியவை. இவற்றின் சேர்க்கையினுலேயே இப்பிரபஞ்சத் தோசங்கள் தோன்றி இயங்குகின்றன. தோற்றங்கள் அழியினும் அவை தோன்றுவதற்குக் காரணமாயிருந்த மூல தத்துவங்கள் அழிவதில்லை. பரம்பொருள் இல்லாவிட்டால் ஜீவ ஜகத்தில்லை. ஜீவஜகத் இல்லாவிட்டால் பரம்பொருள் இருந்தும் இல்லாததேயாகும். சிருஷ்டியின் மூலமாகவே பரமன் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிருன்.

மரணத்தின் மூலம் அழிவது மனப்பிராண ஸ்தூல தேகங்களேயன்றி ஜீவனன்று; மரணத்திற்குப்பின் மனம் விஸ்வ மனத்திலும் பிராணன் விஸ்வப் பிராணனிலும் தேகம் விஸ்வப்பிரகிருதியிலும் கலந்து ஒன்றிவிடுகின்றன. ஆனுல் ஜீவன் அழிவதில்லை. முற்பிறவிகளிலும் இப்பிறவியிலும் பெற்ற அனுபவங்களுடனும் சூட்சும சரீரத்துடனும் சூட்சும உலகங்களில் உணர்வு நிலைகளில் தந்நிலைக்கும் பரிபக்குவத்திற்கும் தகுந்தாற்போல தங்கி ஓய்வு பெற்றபின் மீண்டும் புதிய அனுபவங்களைப் பெறுவதன் பொருட்டு புதிய மனப் பிராண ஸ்தூல தேகங்களையும் சூழ் நிலைகளையும் ஏற்று இவ்வுலகில் பிறந்து விட்ட இடத்தினின்றும் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கின்றது.

ஜீவயாத்திரையின் இறுதி லட்சியத்தை அடையும் வரை மீண்டும் மீண்டும் பிறந்துகொண்டும் இறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுமிருக்கும் ஓரறிவுடைய உயிரினங்கள் மறு பிறவி
யில் மனிதனுகவும் மனிதன் ஓரறிவுடைய உயிரினங்களா
கவும் மாறிப் பிறப்பதில்லை.

உணர்வின் பரிணுமத்திற்குத் தகுந்தாற் போலவே
யாவும் நிகழ்கின்றன. உள்ளுணர்வின் மலர்ச்சிக்கும்
வளர்ச்சிக்கும் பரிபக்குவத்திற்கும் தகுந்தாற் போலவே
உடலும் உருவமும் பெற்ருேரும் சூழ்நிலைகளும் அமைகின்
றன.

நாம் செய்யும் கருமத்திற்குத் தகுந்தாற் போலவே
உள்ளுணர்வு வளர்ச்சியடைகின்றது. உள்ளுணர்வின் வளர்
ச்சிக்குத் தகுந்தாற்போலவே மறு பிறவியும் சூழ் நிலைக
ளும் அமைகின்றன. இப்பிறவியுள்ளதே முற்பிறவிகளும்
மறுபிறவிகளும் உள்ளதற்குப் போதிய சான்ருகும்—முற்
பிறவி இப் பிறவி இனிவரும் பிறவியாகிய மூன்றும் சங்கி
லித் தொடர்போல் இணைபிரியாதபடி பிணைக்கப்பட்டுள்
ளன. முற்பிறவிகளில் பெற்ற அனுபங்களின் அஸ்திவார
த்தின் மீதே இப்பிறவி தோன்றியுள்ளது. இப்பிறவியில்
நாம் பெறும் உள்ளுணர்வின் வளர்ச்சிக்குத் தகுந்தாற்
போலவே இனிவரும் பிறவி அமையப் போகின்றது.

கடலில் தோன்றிய அலைகளெல்லாம் மீண்டும் கடலில்
ஒன்றிக் கலந்து விடுவதே போன்று தோற்றங்கள் அழியும்
போது ஜீவர்களெல்லாம் எவ்வித வேறுபாடு மின்றி பரம்
பொருளில் ஒன்றிக் கலந்து விடுவது உண்மையாயின் இவ்
வாழ்வில் காணப்படும் சமன்செய்ய முடியாத வேறுபாடு
களுக்கு மூலகாரணம் யாது—மனதிற்குக் கீழுள்ள உணர்வு
நிலைகளில் வதியும் உயிரினங்களுக்கும் மனிதனுக்கும் எவ்
வளவோ வேறுபாடுகள் உள்ளன – மேலும் மனிதர்கள்
எல்லோரும் ஒரேவிதமான உணர்வுநிலையில் வதியவில்லை.
அதிக வேறுபாடுகள் உள்ளன; மரணத்திற்குப்பின் ஜீவர்
கள் இறைஉணர்வில் கலந்து ஒன்றுவது உண்மையாயின்
நாம் இயல்பாக அடையும் ஒரு பெருநிலையை நாம் அடை
வதற்காக கடும் சாதனைகள் செய்வானேன்.



நாம் உயிருள்ள போது அடையாத ஒரு ஆத்மீகப்
பெருநிலையை இறந்த பிறகு சூட்சும உலகங்களில் உணர்வு
நிலைகளில் அடைந்துவிடமுடியாது. இப்போதுள்ள நிலை
யின் பிரதி பிம்பமும் தொடர்ச்சியுமே சூட்சும உலகங்க
ளும் மறுபிறவியுமாகும். ஆகையினுல் அதிதீவிர மெய்ப்
பொருள் கேட்கள் உயிருள்ள போதே அதிதீவிர சாதனை
கள் செய்து அரும்பெரும் ஆத்மீக நிலைகளையடைய பெரு
முயற்சி செய்யவேண்டும்.

பிரத்தியட்ச உலகம் உள்ளதே போன்று சூட்சும
உலகங்களும் உணர்வுநிலைகளும் உள்ளன. இங்கு உள்ள
தைப் போலவே அங்கும் நியதிகளும் தர்மங்களும் உள்
ளன. எதுவும் தாறுமாருக நிகழ்வதில்லை.

நாம் காணும் தோற்றங்கள் அனைத்திற்கும் பூமி
ஆதாரமாக இருப்பதைப் போன்று மனத்தால் இன்ன
தென்று ஊகிக்கவோ, உணரவோ, விளக்கவோ முடியாத
அகண்ட பேருணர்வு எங்கும் நீக்கமற நிறைந்திருந்து
அனைத்தையும் தாங்குகின்றது. அனைத்திற்கும் மூலமும்
முடிவும் அதுவே. அதையே அநாதியான வேதங்கள் பரம்
பொருளென்று அருளுகின்றன.

அருந்தவ வாழ்வின்மூலம் உள்ளாழ்ந்த நிச்சலன
மோனத்தில் ஆத்மானுபூதியின் மூலம் அதை உணர்ந்
தோனே யோகசித்தன். பரம்பொருளின் ஸ்தூல வடிவமே
ஜடமெனப்படுவது. சிவமும் சடமும் வெவ்வேருனவைக
ளன்று. சிவத்தில் உள்ள தன்மைகளெல்லாம் சடத்தில்
வித்தில்மரம் போன்று வெளிப்பாடடையாமல் உள்ள
டங்கி ஒடுங்கிக் கிடக்கின்றன. சடத்தில் ஒடுங்கிக் கிடக்
கும் சிவத்தை பூரணப் பொலிவுடன் தெய்வீக சௌந்தர்
யத்துடன் வெளிப்பாடடையச் செய்வதுவே வாழ்வின்
குறிக்கோளாகும்.

யுகந்தோறும் இயற்கையன்னை புரியும் மாபெரும்
வேள்வியால் மகத்தான தியாகத்தால் அரும் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையினால் காலக்கிரமத்தில் சடத்தில் உள்ளடங்கியுள்ள பேருணர்வானது மலர்ச்சியும் வளர்ச்சியுமுற்று உயிர் பிராணன் மனமாகப் பரிணமித்துமுடிவில் பரிபக்குவமும் பரிபூரணத்துவமுமுற்று தன் இயல் நிலையை யதார்த்த சொரூபமாகிய கரைகாணமுடியாமல் எங்கும் பரந்து விரிந்து கிடக்கும் அகண்டாத்மனே என்பதை உணர்ந்து நிரந்தமும் பேரானந்தப் பெருங்களிப்பில் திளைக்கின்றது. இவ்வரும் பெரும் நிலையை அடைவதுவே மாணவ ஜீவனின் ஆதரிசமும் ஜீவயாத்திரையின் இறுதி லட்சியமுமாகும்.

* • •

நாம் முற்பிறவிகளில் செய்த பாவ கர்மங்களின் பலனை அனுபவிப்பதற்காகத் தோன்றிய கொடுந்துயர் சிறைக்கோட்டமன்று வாழ்க்கை-சிருஷ்டிக்கு உட்பட்டதன் மூலம் தன் யதார்த்த சொரூபத்தை மீண்டும் உணர்ந்து இன்புறுவதற்காகச் செய்யும் மகத்தான சாதனா நிலையமே வாழ்க்கை. இப்பெருநிலை ஒரு பிறவியில் அடையக்கூடியதன்று. பல்லாயிரம் பிறவிகளில் செய்யும் அரும் பெரும் சாதனைகளினாலேயே இப்பெரும் பேறு சித்திக்கின்றது.

மனித குலம் சாதித்த சாதனைகள் அனைத்துள்ளும் மகத்தானதும் தன்னிகரில்லாத தனிப்பெரும் சிறப்பினையுடையதும் பரம்பொருள் தரிசனமேயாகும்.

ஏனெனில் வாழ்க்கைக்குப் பின்புள்ள பேருண்மையையும் வாழ்வின் உண்மையையும் மரணத்தின் ரகசியத்தையும் முடிவின்றி யுகயுகமாக சாஸ்வதநியதிகளுக்கு உட்பட்டு இயங்கிக் கொண்டிருக்கும் இப்பிரபஞ்ச இயக்கங்களின் மூலகாரணத்தையும் ஜீவயாத்திரையின் இறுதிலட்சியத்தையும் உணரச்செய்து நித்தமும் பேரானந்தப் பெருங்களிப்பில் திளைக்கச் செய்வது பரம்பொருள் தரிசனமேயாகும்.



கடவுளைத்தேடி அலைகிறோம். நீண்டயாத்திரை செய்கிறோம். காடுகளிலும் மலைக் குகைகளிலும் தங்கி ஊன் வாட உயிர் வாடக் கடுந் தவம் புரிந்து புலன்களையும் மனதையும் ஒடுக்குகிறோம். யோகமார்க்கங்களைப் பின்பற்றி தீவிர சாதனைகள் செய்கிறோம். முடிவில் பல்லாயிரம் பிறவிகளில் செய்த நற்றவப் பயன்களினாலும் இப்பிறவியில் செய்யும் அதிதீவிர ஆத்ம சாதனையினாலும் இறையருளினாலும் மாயை இருட்திரை, அகன்று அகந்தைத் தனி உணர்வு அழிந்து எண்ணங்களற்ற நிச்சலனமோனத்தில் எங்கும் நீக்கமற நிறைந்து இருப்பதுவும் யாவுமாய் விரிந்து இயங்குவதுவுமான பரம் பொருளை ஆத்மானுபூதியின் மூலம் சாட் சாத்கரிக்கிறோம் — அப்போது தேடுவோன் தேடட்டும். தேடப்படும் பொருள் யாவும் ஒன்றாய் இருப்பதையும், நம்மிடமுள்ள ஒரு பொருளையே இதுவரை புறத்தே தேடி அலைந்ததையும் நாம்காணும் இவ்விஸ்வப் பிரபஞ்சத் தோற்றுங்களாக விரிந்து இயங்குவது ஏகபரம் பொருளே என்பதையும் அப்பரம் பொருளே நாம் என்பதையும் நமக்கு அந்நியமாக எங்கும் ஒன்றும் இல்லை என்பதையும் உணர்ந்து பெரும் வியப்பினில் ஆழுகிறோம்.

தன்பொருட்டு மாத்திரம் பிரயாசப் படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்; அவ்வற்ப இன்பமோ மிக இழிந்தது.

அறிவும் அதனால் ஆகிய நற்குண நற்செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுதற்கு யோக்கியனாய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்தஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபகரிக்கப்படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல் கூடும்: நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது. -நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரியாரும் வாதவூரடிகளும்

கா. கு. சண்முகம்–கோவை மாவட்டம்

வாக்கிற்கு அருணகிரி என்பர், ஆன்றோர். அதுபோல் திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார் எனவும் கூறினர். எனவே இருவரும் வாக்கு வன்மை உடையவர் என்பது தெளிவாகிறது. வாக்கு, வாசகம் இரண்டும் ஒன்றே. அருணகிரி பிற்காலத்தவர், வாதவூரர் முற்காலத்தவர். வாதவூரர் சிவபக்தர்; அருணகிரி முருக பக்தர். ஆயினும் சிவனைப்பற்றி பல நுட்பமான கருத்துக்களைப் பல இடங்களில் கூறியுள்ளார். ஆனால் மாணிக்க வாசகர் இரண்டு இடங்களில் மட்டுமே முருகனை, வேலன், குமரன் என்று குறிப்பிடுகிறார்.

வாதவூரர் பாடல்களில் வடசொற்கள் மிகக்குறைவு. ஆனால் அருணகிரியார் பாடல்களில் அது சற்று அதிகமாகவே காணப்படுகிறது. இருப்பினும் இருவர் பாடல்களும் கற்பார் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் தன்மையன. மிகப்பெரிய கருத்துக்களை மிக எளியமுறையில் கூறி உள்ளனர். வாதவூரர் இயற்றிய திருவாசகத்தில் 51 அதிகாரங்கள் உள்ளன. அதுபோல் அருணகிரியார் இயற்றிய கந்தர் அனுபூதியில் 51 பாடல்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இருவருக்கும் உள்ள ஒற்றுமையான கருத்துக்கள் சுருக்கமாக, பின்வரும் ஆறு தலைப்புகளின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன-

## 1. ஆசை

ஆசை என்பது புலன்களின் வழியாக நமக்கு உலகப் பொருள்களின்மீது உண்டாகும் ஓர் உணர்வு. இது மக்க



ளினத்துக்கு மட்டும் அல்லாது விலங்கினம் முதலியவற்றுக்கும் இருக்கக்கூடியது. ஒரு வித்தியாசம் என்னவென்றால், விலங்கினங்களுக்கு ஆசைகள் குறைவு. அதே சமயம் அவற்றைக் கட்டுப்படுத்தும் சக்தியும் குறைவு. ஆனால் மனிதசாதிக்கு ஆசை மிகுதி; ஆயினும் அதைக் கட்டுப்படுத்தும் சக்தி அதிகம். ஆசைகளைக் கட்டுப்படுத்தும் சக்தி அதிகரிக்குமளவு மனிதன் உயர்வடைகிறான். ஆசைக்கு அடிமையாகிறவன் கீழ்நிலைக்குப் போகிறான். ஆசைக்குக் காரணமாகிய புலன்களை வஞ்சனை செய்யும் புலன்கள் என்கிறார் மணிவாசகர். புலன்கள் வழியே நாம் செல்வது கூடாது. புத்தியின் வழியே புலன்கள் செல்ல வேண்டும். ''புகவே வேண்டாம் புலன்களில்நீர்'' என்றார் மணிவாசகர். சிறிது சிறிதாகப் புலன் நுகர்ச்சியைக் கைவிட்டு, ஆசை அறப்பெற்றால் மேன்மை அடைவோம்; இறைவனையும் அடைவோம் என்பதே இருவரின் கருத்து.

''கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய் மனமே ஒழிவாய் ஒழிவாய்
மெய்வாய் விழி நாசியொடு செவியாம்
ஐவாய்வழி செல்லும் அவாவினையே?

–கந்தர் அனுபூதி.

''மாறிநின்றென்னை மயக்கிடும் வஞ்சப்புலன் ஐந்தின்
வழி அடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழுபரஞ்சோதி''

–திருவாசகம்

## 2. பேராசை

ஆசை எல்லாரிடமும் காணப்பட்டாலும் பேராசை சிலரிடம்தான் காணப்படுகிறது. ஆசை நிறைவேறாதிருந்து, அது பேராசையாக மாறுவதும் உண்டு. சிலருக்கு இயற்கையாகவே பொருள், பூமி முதலியவற்றின் மீது பேராசை உண்டு. அவர்களுக்கு எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி ஏற்படாது. பேராசையை ஒரு பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணி என்கிறார் அருணகிரியார். சிலரைப் பொறுத்த வரையில் அது தீராத வியாதி என்றே கூறலாம். அந்தத் தீராத வியாதியில் நானும் சிக்கிச் சீரழிவதா எனக் கேட்கிறார் அவர். அதையே மணிவாசகரும் கேட்கிறார்.

**''பேராசை என்னும் பிணியில் பிணிபட்டு**
**ஓராவினையேன் உழலத் தகுமோ''**

—அனுபூதி

**''பேராசையாம் இந்தப்பிண்டம் அறப் பெருந்துறையான்**
**சீரார் திருவடி என் தலைமேல் வைத்தபிரான்**

—பூவல்லி

## 3. பெண்ணாசை

''வேல் போன்று கூர்மையான விழிகளையுடைய மங்கையர்களின் கொங்கைகளை விரும்பும் நான், இருள் நீங்கி அருள் சேர்வதென்பது இயலுமா?'' என ஐயம் கொள்கிறார் அருணகிரியார்.

**''கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே**
**சேர்வேன் அருள் சேரவும் எண்ணுமதோ?''**

**''சிங்கார மடந்தையர் தீ நெறிபோய்**
**மங்காமல் எனக்கு வரம் தருவாய்.''** — அனுபூதி

சிங்கார மடந்தையரைக் கண்டு சிந்தை மயங்கினால், வாழ்வின் ஒளி மங்கும். எனவே அந்நெறி செல்லாதவாறு வரம் வேண்டுகிறார்.

மணிவாசகரும் இக்கருத்துக்களைத் திருவாசகத்தில் கூறுகிறார்.

''தையலார் என்னும் சுழித்தலைப்பட்டு நான் தலைதடுமாறாமே
பொய்யெலாம்விடத் திருவருள் தந்து'' — அற்புதப்பத்து

''உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப் பழத்து ஈயின் ஒப்பாய்
விழைதருவேனை விடுதி கண்டாய்'' — நீத்தல் விண்ணப்பம்

தொடரும்

# பிரதேச அபிவிருத்தி அமைச்சு
# இந்துசமய இந்து கலாச்சாரப் பிரிவு
## விசேட அறிவித்தல்

இலங்கையின் இந்து ஆலயங்கள் பற்றிய விபரங்களைத் திரட்டும் வேலைத்திட்டத்தில் முதற்படியாக எமது நாட்டிலுள்ள பிள்ளையார் கோவில்களைப்பற்றிய விபரங்களைச் சேகரிக்கும் வேலை டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி விநாயகர் விரதம் ஆரம்பிக்கின்ற நாளன்று, இந்துசமய இந்துகலாச்சார திணைக்களத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

ஏற்கனவே இத்திணைக்களம் வெளியிட்ட பத்திரிகை விளம்பரத்திற்கிணங்க விண்ணப்பித்த கோவில்களைப் பற்றிய விபரம் மாவட்ட ரீதியாக தொகுக்கப்பட்டு வருகின்றது. இம்மாதம் 23ஆம் திகதி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற அகில உலக இந்து மகாநாட்டின் ஆலோசனைக் கூட்டத்தில் மேலும் பல கோயில் பிரதிநிதிகள் விபரங்களைத் தந்துதவினார்கள். அவ்விபரங்களும் திணைக்களத்தால் சேர்க்கப்பட்டுள்ளது. ஏனைய விநாயகப் பெருமான் ஆலயங்கள் தங்கள் விபரங்களை ''பிள்ளையார் கதை'' நாட்களாகிய 21 நாட்கள் முடியுமுன் தந்துதவுமாறு இந்து சமய இந்துகலாச்சார பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவிலின் தோற்றமும் வரலாறும், கோவிலுக்குரிய ஊஞ்சல்பாடல்கள், நித்தியநைமித்தியத்திருவிழா பூசை விபரம், ஆலய அமைப்பு, சிற்பச் சிறப்பு, விநாயகர் விரதம், அனுஷ்டிக்கின்ற முறை, அங்கு வழங்கும் அறக்கட்டளைகள், தானதருமங்கள், தேவஸ்தான வெளியீடுகள் போன்ற விபரங்கள் அனுப்பி வைக்கப்படுமாயின், ''இலங்கையில் விநாயகர் வணக்கம்'' பற்றிய வெளியீட்டில் சேர்த்துக்கொள்ளப்படும்.

செலின்கோ மாளிகை,
2வது மாடி,
கொழும்பு–1

**பணிப்பாளர்**
**இந்து சமய இந்துகலாச்சாரப் பிரிவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G. P. O. as a Newspaper M. L. 359,00.

# தமிழ் நாட்டில் ஆத்மஜோதி ஆசிரியர் சொற்பொழிவு



| | |
|---|---|
| 25-12-79 | மாலை 6-00 கட்டுநாயக்காவிலிருந்து புறப்படுதல் |
| 26-12-79–30-12-79 | இராசிபுரம் தெய்வீக வாழ்க்கைச் சங்கம் |
| 31-12-79–4-1-80 | சென்னை ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் |
| 5-1-80—8-1-80 | தாம்பரம்-இறைபணி மன்றம் |
| 9-1-80—10-1-80 | சென்னை-சைவசித்தாந்த சமாஜம் |
| 11-1-80—25-1-80 | மானம்பதி |
| 26-1-80–27-1-80 | புதுக்கோட்டை |
| 28-1-80—1-2-80 | சிதம்பரம் |
| 2-2-80—6-2-80 | விழுப்புரம் |

## ஆத்மஜோதி ஆண்டுச் சந்தா

| | |
|---|---|
| இலங்கைக்கு | ரூபா. 15-00 |
| இந்தியாவுக்கு | ரூபா. 20-00 |
| இதர நாடுகள் | 5 வெள்ளி |
| ஆயுள் சந்தா | ரூபா. 300-00 |
| தனிப் பிரதி | ரூபா. 1-25 |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி — (ஸ்ரீ லங்கா)

ஆசிரியர்: நா. முத்தையா
அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் – நாவலப்பிட்டி.
அச்சிட்ட திகதி: 17-11-79.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org